விலை: 30.00 Viber : 076 636 3378
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk




சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 தை 23 வெள்ளிக்கிழமை (05.02.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 048

## பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான
# தமிழர்களின் நீதிக்கான பேரணி திருமலைக்கு நகர்வு

### முஸ்லிம்கள் நேற்று அமோக ஆதரவு



(மட்டக்களப்பு)

பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை வடக்கு - கிழக்கு சிவில் அமைப்புகளால் முன்னெடுக்கப்பட்டு வரும் நீதிக்கான கவனயீர்ப்பு பேரணியின் 2ஆம் நாள் திருகோணமலையில் நிறைவு பெற்றுள்ளது. (19ஆம் பக்கம் பார்க்க)

## காயங்களுடன் வவுனியாவில்
### பெண்ணின் சடலம் மீட்பு

(வவுனியா)


வவுனியா பூவரசங்குளம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட எருக்கலம்கல் பகுதியில் தலையில் ▷19

## வடக்கில் 8 பேருக்கு கொரோனா

(யாழ்ப்பாணம்)

வடக்கில் நேற்று 8 பேர் கொரோனா ▷19

## சுதந்திர தினத்தை
### கரிநாளாக பிரகடனப்படுத்தி
### யாழ்.பல்கலையில் பதாதை



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தில் இலங்கையின் சுதந்திர தினம் கரிநாளாக பிரகடனப்படுத்தப்பட்டு ▷19

## பௌத்த போதனைப்படியே
# இலங்கையை ஆட்சி செய்வேன்
### நான் சிங்கள பௌத்த தலைவன்
### சுதந்திர தின உரையில் கோட்டா



(கொழும்பு)

நான் ஒரு சிங்கள பௌத்த தலைவன். பௌத்த போதனைகளின்படியே இலங்கையை ஆட்சி செய்வேன் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தனது சுதந்திர தின உரையில் தெரிவித்துள்ளார். (19ஆம் பக்கம் பார்க்க)

## எங்களை தனித்தனியாக பிரித்தாள முடியாது
### நடைபவனியில் சுமந்திரன் எம்.பி

(மட்டக்களப்பு)

பெரும்பான்மை இனத்தினை சேராதவர்கள் என்ற ஒரு காரணத்திற்காக எங்கள் மக்களுக்கு எதிராக கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள பேரினவாதத்திற்கு எதிராக நாங்கள் ஒன்றுசேர்ந்து திரண்டு நின்றால் மட்டும்தான் முகம் கொடுக்க முடியும் என ஜனாதிபதி சட்டத் ▷19

## புரட்சி எப்போதும் வெல்லும்! வரலாறு அதனைச் சொல்லும்!
### நீதிப் பேரணிக்கு சீமான் வாழ்த்து

(சென்னை)

ஈழத்தில், சிங்களப் பேரினவாத அரசால் திட்டமிட்டு நிகழ்த்தப்பட்ட இன அழிப்புப்போரில் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளைக் கேட்டு கிளிநொச்சி கந்தசுவாமி கோயில் முற்றத்தில் நடைபெற்று வரும் பட்டினிப் போராட்டமும் பொத்துவிலிலிருந்து தொடங்கியிருக்கும் நடைபயணமும் நம்பிக்கையைத் ▷19

## நீதிக்கான பேரணி மேலும் ஒருநாள் நீடிப்பு
### ஞாயிறன்றே பொலிகண்டியை வந்தடையும்

(மட்டக்களப்பு)

தமிழர் தாயகத்தில் இடம் பெற்று வரும் கட்டமைக்கப்பட்ட இனவழிப்புக்கு எதிராகவும் தமிழ் பேசும் இஸ்லாமிய சமூகத்தினர் மற்றும் மலையகத் தமிழ் மக்கள் எதிர்நோக்கி வரும் அடக்குமுறை ▷19

### தமிழர்களின் நீதிக்கான
## அகிம்சைப் போராட்டத்தை அரசியல் ஆக்க வேண்டாம்

(மட்டக்களப்பு)

தமிழர்களுக்கு நீதி கோரி முன்னெடுக்கப்பட்டுள்ள பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான அகிம்சைப் போராட்டத்தை யாரும் குழப்பாதீர்கள் என வடக்கு - கிழக்கு சிவில் சமூகங்களின் இணைத் தலைவர்களான வேலன் சுவாமிகள் மற்றும் சீலன் ▷19

## கொரோனாவால் 07 பேர் மரணம்

(கொழும்பு)

இலங்கையில் ▷19

### தொடர்ச்சியான போராட்டமே
## தமிழர்கள் சர்வதேச நீதியைப் பெற ஒரே வழி
### கஜேந்திரகுமார் பொன்னம்பலம்

(யாழ்ப்பாணம்)

எம்மைப் பொறுத்தவரை திசை மாறாமல் தமிழினம் தொடர்ச்சியாகப் போராடுகின்ற ஒருநிலைமையை உருவாக்கி அதனை விடாப்பிடி ▷19

# தமிழர்களின் உரிமை போராட்டத்திற்கு மலையகத்திலும் ஆதரவு

## இராதாகிருஷ்ணன் எம்.பி தெரிவிப்பு

(கொழும்பு)

பொத்துவில் தொடங்கி பொலிகண்டி வரையான தமிழர்களின் உரிமைப் போராட்டத்துக்கு மலையக மக்கள் முன்னணியும் முழு ஆதரவை வழங்குவதாக முன்னணியின் தலைவரும், தமிழ் முற்போக்கு கூட்டணியின் பிரதித் தலைவருமான வீ.இராதாகிருஷ்ணன் எம்.பி. தெரிவித்தார்.


அட்டனில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு, சம்பள உயர்வுக்கான உரிமைப்போராட்டம் மற்றும் பொத்துவில் முதல் பொலிகண்டி வரையில் நடைபெறும் உரிமைப் போராட்டம் ஆகியன தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இவை குறித்து அவர் மேலும் கூறியவை வருமாறு,

வடக்கு, கிழக்கில் பொத்துவில் தொடங்கி பொலிகண்டி வரையான உரிமைப் போராட்டத்துக்கும் மலையக மக்கள் முன்னணி முழு ஆதரவை வழங்குகின்றது. இது தொடர்பில் மாவை சேனாதிராஜாவுடன் கலந்துரையாடினோம். அவர்களும் எமது சம்பள உயர்வு போராட்டத்துக்கு ஆதரவை வழங்கியுள்ளார்.

வடக்கு, கிழக்கில் இன்று காணிகள் அபகரிக்கப்படுகின்றன. தொல்லியல் ஆய்வு என்ற போர்வையில் ஆக்கிரமிப்புகள் நடைபெறுகின்றன. இவை நிறுத்தப்படவேண்டும். அதற்காக தமிழ்க்கட்சிகள் முன்னெடுக்கும் நடவடிக்கைக்கும் ஒத்துழைப்பு வழங்கப்படும் என்றார். (ம-03)

# வைத்தியர் நெவில் கொரோனாவால் மரணம்



(கொழும்பு)

கொரோனாத் தொற்றினால் பாதிக்கப்பட்டிருந்த மாலபே நெவில் பெர்னாண்டோ பொது வைத்தியசாலையின் நிறுவுனர் வைத்தியர் நெவில் பெர்னாண்டோ நேற்று உயிரிழந்துள்ளார்.

கடந்த சில நாட்களுக்கு முன்னர் கொரோனாத் தொற்றுக்கு உள்ளான இவர் மாலபே நெவில் பெர்னாண்டோ பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டிருந்த நிலையில் மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு ஐடிஎச் மருத்துவமனைக்கு மாற்றப்பட்டிருந்தார்.

இந்நிலையில் அவர் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்துள்ளதாக கோவிட்-19 தடுப்பு தேசிய செயற்பாட்டு மத்திய நிலையம் அறிவித்துள்ளது. (ம-03)

# மதுபானம் மற்றும் சிகரட் பயன்படுத்துவோருக்கு

## கொரோனா தடுப்பூசி வழங்கமுடியாது

(கொழும்பு)

மதுபானம் மற்றும் சிகரட் பாவிப்போருக்கு கொரோனா தடுப்பூசி வழங்க முடியாது என சிகரட் மற்றும் மதுசாரம் தொடர்பான தேசிய அதிகார சபையின் தலைவர் சமாதி ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

சிகரட் மற்றும் மதுபானம் பயன்படுத்துவோருக்கு உடலில் நோய் எதிர்ப்பு சக்தி குறைவாகவுள்ள நிலையில் அவர்களுக்கு தடுப்பூசி வழங்க முடியாது.

மதுபானம் மற்றும் சிகரட் பாவனையாளர்களுக்கு தடுப்பூசி வழங்கப்பட வேண்டும் என்றால், அவர்கள் தடுப்பூசி வழங்கப்பட்ட தினத்திலிருந்து குறைந்தது 6 மாதங்களாவது அவற்றை பயன்படுத்தாது இருக்கவேண்டும் என அவர் தெரிவித்துள்ளார். (ம-03)

## 14 ஆயிரம் பட்டதாரிகளை

# அரச சேவையில் இணைக்க தீர்மானம்

(கொழும்பு)

இம்மாத இறுதிக்குள் 14 ஆயிரம் பட்டதாரி பயிலுனர்களை அரச சேவையில் இணைத்துக் கொள்ளவுள்ளதாக அமைச்சர் ஜானக பண்டார தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

பட்டதாரிகளை அரச சேவையில் இணைத்துக் கொள்வது பற்றி அரச சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் அமைச்சின் அதிகாரிகளுடன் இடம்பெற்ற பேச்சுவார்த்தையின் பின்னரே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதன்படி 2019ஆம் ஆண்டு பயிலுனர்களாக இணைத்துக் கொள்ளப்பட்ட பட்டதாரிகளை அரச சேவையில் இணைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். (ம-03)


# மரண அறிவித்தல்



## பிள்ளையம்மா சுப்பிரமணியம்

**தோற்றம் : 14.08.1946 மறைவு : 03.02.2021**

யாழ்ப்பாணம் அம்மன் வீதியைப் பிறப்பிடமாகவும் இல. 70 (100), பருத்தித்துறை வீதி, ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட பிள்ளையம்மா சுப்பிரமணியம் நேற்று முன்தினம் (03.02.2021) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியத்தின் (மெக்கானிக்) அன்பு மனைவியும் நீதிராசா (ஆசிரியர்), சிறிஸ்கந்தராசா, சுசிலா (கனடா), ஜெயராசா, விஜயராசா, மாலினி, காமினி (பிரதேச செயலகம் - வேலணை) ஆகியோரின் அன்புத் தாயாரும் சாந்தலிங்கம் (கனடா), ஜெயராசா, ஜெயாலினி, பத்மாவதி, சுபோதினி, கலைவாணி, ஜனனி (பிரதேச செயலகம் - கோப்பாய்) ஆகியோரின் அன்பு மாமியும் டினோஷன், தனுஷன், தனுஜா, நீதிகா, நீருஷன், டிருஜன், பர்மிளா, கஜானன், நாவேந்தன், றட்சிதன், ஹேசியன், மிகாரா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (05.02.2021) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.


இல. 70 (100),
பருத்தித்துறை வீதி,
ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.


(5536)


தகவல்:
சிறிஸ்கந்தராசா (மகன்) - 077 711 0119
விஜயராசா (மகன்) - 077 201 8275
(சந்நிதி முருகன் வேக்சொப் அன் சேவிஸ்)


# பொத்துவில் தொடங்கி பொலிகண்டி வரையான பேரணி

## தடைகளைத் தாண்டி 2 ஆவது நாளாக எழுச்சியுடன் முன்னெடுப்பு















பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான தொடர் போராட்டம் 2 ஆவது நாளாக நேற்றும் எழுச்சியுடன் நடைபெற்றது.

இந்தப் பேரணியின் போது எங்கே எங்கே உறவுகள் எங்கே?, எரிக்காதே எரிக்காதே ஜனாஸாக்களை எரிக்காதே? எங்கள் நிலம் எமக்கு வேண்டும், வேண்டும் வேண்டும் நீதி வேண்டும், வேண்டும் வேண்டும் உரிமை வேண்டும், திரும்பிப் பார் திரும்பிப் பார் சர்வதேசமே திரும்பிப் பார், வடக்கு-கிழக்கு தமிழர்களின் தாயகம், ஐ.நா.சபையே தலையிடு, வழங்கு வழங்கு ஆயிரம் ரூபாய் சம்பள உயர்வை வழங்கு போன்ற முழக்கங்கள் ஓங்கி ஒலித்தன.

வடக்கு-கிழக்கு சிவில் சமூகத்தினர், பல்கலைக்கழக மாணவர்கள், தமிழ்த் தேசியக் கட்சிகளைச் சார்ந்தவர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் பங்கேற்று வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

## அகிம்சைப் போராட்டம் கவனத்தில் கொள்ளப்படும்

## ஐ.நா.மனித உரிமைப் பேரவை கடிதம்

**(கொழும்பு)**

**தமிழினத்திற்கு நீதிகோரிய, பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையிலான போராட்டம் முழுமையான கவனத்தில் கொள்ளப்படும் என ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் விசேட அறிக்கையிடும் ஆணையாளர் அலுவலகம் உறுதிப்படுத்தியுள்ளது.**

மதம் சுதந்திரம் குறித்த அறிக்கையாளர் அகமது ஷாஹீத் மற்றும் கலாசார உரிமைகள் குறித்த சிறப்பு அறிக்கையாளர் கரிமா பென்னவுன் ஆகியோரின் அலுவலகம் இதனை தெரிவித்துள்ளது.

இந்த அமைதி போராட்டம் தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் சிறப்பு அறிக்கையாளர் இருவருக்குமான கடிதம் கடந்த செவ்வாய்க்கிழமை அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், அந்த கடிதத்திற்கு பதில் அனுப்பியுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் சிறப்பு அறிக்கையாளர்கள் இருவரும் இவ்வாறு தெரிவித்தனர்.

அந்தக் கடிதத்தில், அன்பு மிக்க வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள் சார்பில் அனுப்பி வைக்கப்பட்டிருந்த பத்துக் கோரிக்கைகள் அடங்கிய சிறப்புக் கடிதமும் தகவல்களும் எமக்கு கிடைக்கப்பெற்றன.

தமிழினத்திற்கு நீதிகோரிய, பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையிலான இந்தப் போராட்டம் முழுமையான கவனத்தில் கொள்ளப்படும்.

போராட்டத்தில் ஈடுபடும் அனைவரும் பாதுகாப்பாக இருக்குமாறும் அவர்கள் வலியுறுத்தியுள்ளனர் என இவ் அலுவலகத்தின் சார்பில் கருத்துத் தெரிவித்த ஐ.நாவின் விசேட அணிக்கான முக்கியஸ்தர் சியான் யு லிங் இதனை உறுதிப்படுத்தியுள்ளார். (நி-4)

## அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்த வேண்டும்

### மீண்டும் தனது நிலைப்பாட்டை பகிரங்கமாக அறிவித்தது இந்தியா



(கொழும்பு)

அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்த வேண்டும் என இந்தியா மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

கொழும்பிலுள்ள இந்திய தூதரகத்தின் துணை உயர் ஸ்தானிகர் வினோத் கே ஜேக்கப் நேற்று முன்தினம் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமை சந்தித்து பேசியபோதே இதனைத் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு கொவிட் தடுப்பூசிகளை விரைவாக வழங்கிய இந்தியாவின் செயற்பாட்டை ஹக்கீம் பாராட்டினார். பொருளாதார, நிதி மற்றும் அபிவிருத்தி ஒத்துழைப்பு தொடர்பான விடயங்களையும் இருவரும் விவாதித்தனர்.

அண்மைய நாட்களில் முஸ்லிம் சமூகம் எதிர்கொ ள்ளும் சவால்கள் குறித்து தனது மதிப்பீட்டை ஹக்கீம் பகிர்ந்து கொண்டதாக உயர் ஸ்தானிகராலயம் தெரிவித்துள்ளது.

13 ஆவது திருத்தம் மற்றும் மாகாண சபைகளை முழுமையாக அமுல்படுத்துவதன் மூலம் அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வு குறித்த இந்தியாவின் நீண்டகால மற்றும் கொள்கை ரீதியான நிலைப்பாட்டை துணை உயர் ஸ்தானிகர் மீண்டும் வலியுறுத்தினார். (நி-5)

# சேப்பாக்கம் தந்ததே வசந்தம்

## இந்திய – இங்கிலாந்து முதல் டெஸ்ட் படு ஜோராக ஆரம்பம்




26 பயிற்சியின் போது ரதோர், புஜாரா

இரு அணிகள் 122 டெஸ்டில் மோதின. இந்தியா 26, இங்கிலாந்து 47ல் வென்றன. 49 போட்டிகள் சமனாகின.

◈ இந்திய மண்ணில் இங்கிலாந்து 60 டெஸ்டில் பங்கேற்றது. இதில் இந்தியா 19, இங்கிலாந்து 13ல் வென்றன. 28 டெஸ்ட் சமனாகின

இந்தியாவில் ஒரு ஆண்டுக்குப் பின் சர்வதேச கிரிக்கெட் தொடர் இன்று ஆரம்பமாகிறது. சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் நடக்கும் முதல் டெஸ்டில் இந்தியா, இங்கிலாந்து பலப்பரீட்சை நடத்துகின்றன.

இந்தியா வந்துள்ள இங்கிலாந்து அணி உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் பின் ஒரு பகுதியாக நான்கு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது.

முதல் டெஸ்ட் சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் இன்று ஆரம்பமாகிறது.

இந்தியாவுக்கு ஆரம்பத்திலேயே ரோகித் சர்மா, இளம் வீரர் சுப்மன் கில் ஜோடி மீண்டும் நம்பிக்கை தர காத்திருக்கிறது. அவுஸ்திரேலியாவில் பவுன்சர்களை தனது உடலில் தாங்கி, தூணாக நின்று வெற்றிக்கு உதவினார் புஜாரா. இந்திய ஆடுகளங்களில் பந்துகள் உயரம் குறைவாக வரும் என்பதால் புஜாரா ஓட்டங்கள் சேர்க்கவும் முயற்சிக்கலாம்.

**பன்ட் உறுதி**

கடந்த ஆண்டில் ஒரு சதம் கூட அடிக்காத ஹோலி, மகள் பிறந்த உற்சாகத்தில் ஓட்ட மழைக்கு முயற்சிப்பார் என நம்பப்படுகிறது. துணைத் தலைவர் ரகானேயும் அணிக்கு கைகொடுப்பார். பிரிஸ்பேன் டெஸ்ட் நாயகன், ரிஷாப் பன்ட், விக்கெட் காப்பாளராக இன்று களமிறங்குகிறார். இது பின்வரிசை துடுப்பாட்டத்தை பலப்படுத்தும்.

**பந்துவீச்சு எப்படி?**

பந்துவீச்சில் இந்திய அணி இரண்டு 'வேகம்', மூன்று 'சுழல்' என 5 பந்துவீச்சாளர்களுடன் களமிறங்க திட்டமிட்டுள்ளது. 'வேகத்தில்' பும்ரா ஆரம்ப விக்கெட்டுகளை வீழ்த்தலாம். சமீபத்திய போட்டிகளில் சாதித்த மொஹமட் சிராஜ், கடந்த ஒரு ஆண்டாக போட்டிகளில் பங்கேற்காத 'சீனியர்' இஷாந்த் சர்மா என இருவரில் ஒருவர் இன்று அணியில் இடம்பிடிப்பார்.

சுழலில் அனுபவ அஷ்வினுடன், 'சைனாமேன்' குல்தீப் யாதவுக்கு ஹோலி வாய்ப்பு தரலாம். மூன்றாவது 'சுழல்' இடத்தில், அறிமுக டெஸ்டில் 'சகலதுறை வீரராக' அசத்திய தமிழகத்தின் வாஷிங்டன் சுந்தர், அக்சர் படேல் இடையே போட்டி காணப்படுகிறது.

**ஜோ ரூட் பலம்**

இங்கிலாந்து அணியின் கிராலே காயத்தால் அவதிப்படுவதால், ரோரி பர்ன்ஸ், போப் ஆரம்பம் கொடுக்கின்றனர். 'நடுத்தர வரிசையில்' சுழற்பந்து வீச்சை சிறப்பாக எதிர்கொள்ளும் அணித் தலைவர் ஜோ ரூட், பலமாக உள்ளார். அடுத்து வரும் பட்லர், ஸ்ரோக்ஸ், விக்கெட் காப்பாளர் பென் போக்ஸ் துடுப்பாட்டத்தில் கைகொடுப்பர்.

**அனுபவ 'வேகம்'**

அண்டர்சன் (606 விக்.), ஸ்ருவேர்ட் பிரோட் (517 விக்.) என 'ஜாம்பவான்' வேகப்பந்து வீச்சாளர்களுடன், ஜோப்ரா ஆர்ச்சரும் இந்திய அணிக்கு தொல்லை தரவுள்ளனர். சுழலில் மொயீன் அலி, ரொம் பெஸ், ஜாக் லீச் என மூவரும் தயாராக உள்ளனர். கிறிஸ் வோக்ஸ் இடம்பெறுவது சந்தேகமே.

போட்டி இலங்கை நேரப்படி இன்று காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகிறது.

## பாபர் ஆசம் அரைச்சதம்

## மழையால் ஆட்டம் பாதியில் நிறுத்தம்

தென்னாபிரிக்காவுக்கு எதிரான 2ஆவது டெஸ்டின் முதல் இன்னிங்ஸில் பாகிஸ் தானின் பாபர் ஆசம் அரைச்சதம் கடந்தார். மழையால் முதல் நாள் ஆட்டம் பாதியில் நிறுத்தப்பட்டது.

பாகிஸ்தான் சென்றுள்ள தென்னாபிரிக்க அணி, இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது. முதல் டெஸ்டில் பாகிஸ்தான் வென்றது. இரண்டாவது டெஸ்ட் ராவல்பிண்டியில் நடக்கிறது.

நாணயச்சுழற்சியில் வென்ற பாகிஸ்தான் அணியின் தலைவர் பாபர் ஆசம் துடுப்பாட்டத்தை தேர்வு செய்தார்.

பாகிஸ்தான் அணிக்கு கேஷவ் மஹராஜ் தொல்லை கொடுத்தார். இவரது 'சுழலில்' இம்ரான் பட் (16), அசார் அலி (0) சிக்கினர். அபித் அலி (6) ஏமாற்றினார்.

பாகிஸ்தான் அணி ஒரு கட்டத்தில் 3 விக்கெட்டுகளை 22 ஓட்டங்களுக்கு இழந்து திணறியது.

அதன்பின் இணைந்த அணித் தலைவர் பாபர் ஆசம், பவாத் ஆலம் ஜோடி விக்கெட் சரிவிலிருந்து அணியை மீட்டது. பொறுப்பாக ஆடிய பாபர் ஆசம் அரைச்சதம் கடந்தார்.

பாகிஸ்தான் அணி, 58 ஓவரில் 3 விக்கெட்டுக்களை இழந்து 145 ஓட்டங்கள் எடுத்திருந்தபோது மழை குறுக்கிட்டது.

தொடர்ந்து மழை நீடித்ததால் முதல் நாள் ஆட்டம் முன்னதாக முடிவுக்கு வந்தது. பாபர் ஆசம் (77), பவாத் ஆலம் (42) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

பந்துவீச்சில் தென்னா பிரிக்கா சார்பில் மஹராஜ் 2, நோர்ட்ஜே ஒரு விக்கெட் வீழ்த்தினர்.

போட்டியின் 2ஆம் நாள் ஆட்டம்




## மெஹிடி கன்னிச் சதம்; …கம் ஸ்திரம்

மே.தீவுகள் அணிக்கு எதிரான முதல் டெஸ்டில் மெஹிடி ஹசன் சதம் அடிக்க, பங்களாதேஷ் அணி முதல் இன்னிங்ஸில் 430 ஓட்டங்களைக் குவித்தது.

பங்களாதேஷ் சென்றுள்ள மே.தீவுகள் அணி அங்கு இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது.

முதல் டெஸ்ட் சாட்டோகிராமில் நடக்கிறது. நேற்று முன்தினம் முதல் நாள் ஆட்டநேர நிறைவில் முதல் இன்னிங்ஸில் பங்களாதேஷ் அணி 242/5 ஓட்டங்களை எடுத்திருந்தது.

**மெஹிடி சதம்**

நேற்று இரண்டாவது நாள் ஆட்டம் நடந்தது. முதல் இன்னிங்ஸை தொடர்ந்த பங்களாதேஷ் அணியின் லிட்டன் தாஸ் (38) நீடிக்கவில்லை. சகிப் அல் ஹசன் 68 ஓட்டங்கள் எடுத்தார். மெஹிதி ஹசன் (103) டெஸ்ட் அரங்கில் முதல் சதம் அடித்து ஆட்டமிழந்தார். பங்களாதேஷ் அணி முதல் இன்னிங்சில் 430 ஓட்டங்களைக் குவித்தது.

பந்துவீச்சில் மே.தீவுகள் அணியின் வாரிகன் 4 விக்கெட்டுக்களைச் சாய்த்தார்.

தொடர்ந்து களமிறங்கிய மே.தீவுகள் அணி இரண்டாவது நாள் முடிவில் முதல் இன்னிங்ஸுக்காக 2 விக்கெட்டுக்களை இழந்து 75 ஓட்டங்களை எடுத்து 355 ஓட்டங்களால் பின்தங்கி உள்ளது.

## ஜோ ரூட்

## 'நூறு' தருமா பேரு



இங்கிலாந்து டெஸ்ட் அணியின் தலைவர் ஜோ ரூட் (வயது-30). இதுவரை 99 டெஸ்டில் 8249 ஓட்டங்கள் (19 சதம்) எடுத்துள்ளார். தவிர 149 ஒருநாள் (5962 ஓட்டங்கள்), 32 சர்வதேச 'ரி20' ல் 893 ஓட்டங்கள் எடுத்துள்ளார்.

தனது 100ஆவது டெஸ்டில் இந்தியாவுக்கு எதிராக சென்னையில் களமிறங்குகிறார்.

இதுகுறித்து ஜோ ரூட் கூறியதாவது,

மூன்று வித கிரிக்கெட்டிலும் வித்தியாசமான சவால்கள் இருக்கும். என்னைப் பொறுத்தவரையில் அனைத்து போட்டிகளிலும் விளையாட வேண்டும் என விரும்புகிறேன். வரும் 'ரி20' உலக கிண்ணத் தொடருக்கான இங்கிலாந்து அணி வலிமையாக இருக்கும் பட்சத்தில் கிண்ணம் வென்று சாதிக்கலாம்.

கடந்த சில ஆண்டுகளாக 'ரி20' அணியில் வாய்ப்பு கிடைப்பதில்லை. இம்முறை இடம் கிடைக்கும் என்ற நம்பிக்கை உள்ளது. ஒருவேளை அணியில் இடம்பெற வில்லை என்றாலும், சக வீரர்களுக்கு ஆதரவாக இருப்பேன். ஏனெனில் ஒருநாள் தொடர் போல, 'ரி20'யிலும் உலக கிண்ணம் வென்றால், அது பெரிய சாதனையாக இருக்கும்.

டெஸ்டில் இந்திய மண்ணில் தான் அறிமுகம் (2012) ஆனேன். இங்கிலாந்து அணிக்காக டெஸ்டில் பங்கேற்க வாய்ப்பு கிடைத்தது மகிழ்ச்சிகரமான தருணம். நேற்று தான் நாக்பூர் டெஸ்டில் விளையாடியது போன்ற உணர்வு உள்ளது. இந்தப் பயணம் இன்னும் தொடரும் என்ற நம்பிக்கை உள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

# அமைதிப் படையில் இருந்து இலங்கைப் படையினரை இடைநிறுத்த வேண்டும்-யஸ்மின் சூக்கா கோரிக்கை



(ஜெனிவா)

**ஐ.நா.மனித உரிமை ஆணையாளர் வெளியிட்டுள்ள அறிக்கையை தொடர்ந்து, இலங்கைப் படையினரை அமைதிப்படை நடவடிக்கைகளில் ஈடுபடுத்துவதை ஐ.நா.இடைநிறுத்த வேண்டும் என சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான திட்டத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் யஸ்மின் சூக்கா வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

ஐ.நா.மனித உரிமை ஆணையாளரின் அறிக்கை அமைதிப் படையில் பணியாற்றுவதற்காக தெரிவு செய்யப்படும் இலங்கைப் படையினர் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டனரா? என ஆராயப்பட்டதா? என்பதை உறுதி செய்யக்கூடிய நிலையில் நியூயோர்க் இல்லை என்பதை வெளிப்படுத்தியுள்ளது.

இலங்கைப்படையினரைஅமைதிப்பணிகளில் ஈடுபடுத்துவதற்கு முன்னர் எச்சரிக்கையுடன் செயற்பட வேண்டிய சட்டரீதியான கடமை ஐ.நா. அமைதிப்பணிகளுக்கான திணைக்களத்திற்குள்ளது எனவும்யஸ்மின்சூக்கா தெரிவித்துள்ளார்.

ஐ.நா.செயலாளர் நாயகத்தின் மனித உரிமை மற்றும் இலங்கையில் நீதி ஆகியவை குறித்த கொள்கை அடிப்படையிலான நிலைப்பாட்டின் அடிப்படையில் யுத்தக்குற்றங்களில் ஈடுபட்டவர்கள் என குற்றம்சாட்டப்பட்டவர்களுக்கு பதவி உயர்வை வழங்கினால் அதற்காக விளைவுகள் என்ன என்பதை ஐக்கிய நாடுகள் அமைதிப்படை இலங்கைக்கு வெளிப்படுத்த வேண்டிய தருணமிது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (நி-4)

## பெருந்தோட்ட தொழிலாளர்களின் போராட்டத்திற்கு அனைவரும் ஆதரவு

(ஹற்றன்)

பெருந்தோட்ட தொழிலாளர்களின் ஆயிரம் ரூபாய் சம்பள உயர்வு தொடர்பாக நடைபெறவிருக்கும் பேச்சுவார்த்தைக்கு ஒரு அழுத்தம் கொடுப்பதற்காக இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், இன்று வெள்ளிக்கிழமை ஒரு நாள் பணிப்பகிஷ்கரிப்பை ஏற்பாடு செய்துள்ளதாக நுவரெலியா பிரதேச சபை தவிசாளர் வேலு யோகராஜா தெரிவித்தார்.

குறித்த ஊடக சந்திப்பில் அவர் மேலும் கூறியுள்ளதாவது, "மறைந்த அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான், பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபாய் சம்பள உயர்வை பெற்றுக் கொடுக்க முயற்சித்த பொழுதும் கடந்த பேச்சுவார்த்தையின்போது 200 ரூபாய் சம்பள உயர்வு மட்டுமே பெற முடிந்தது.

இன்று இ.தொ.காவின் பொதுச்செயலாளரும்இராஜாங்க அமைச்சருமான ஜீவன் தொண்டமான் இந்த ஆயிரம் ரூபாய் சம்பள உயர்வை பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு பெற்றுக் கொடுக்க வேண்டும் என்ற கொள்கையின் அடிப்படையில் செயற்பட்டு வருகின்றார்.

அதன் ஆரம்பகட்டமாக முதலாளிமார் சம்மேளனத்திற்கும் சம்பள நிர்ணய சபைக்கும் அரசாங்கத்திற்கும் ஒரு அழுத்தம் கொடுக்கும் முன்னோடி ஏற்பாடாக இன்று அமைதியான ஒரு நாள் பணிப்பகிஷ்கரிப்பை நடத்த ஏற்பாடு செய்துள்ளார்.

இதற்கு எவ்வித பேதமும் இன்றி அனைவரும் ஒன்றிணைந்து ஒற்றுமையாக கைகோர்க்க வேண்டும்.


அந்த வகையில் குறித்த பணிப்பகிஷ்கரிப்புக்கு அனைத்து தோட்ட தொழிலாளர்களும் மலையகத்தில் உள்ள அனைத்து தொழிற்சங்கங்களும் நுவரெலியா மாவட்டத்தில் உள்ள நகர வர்த்தகர்கள், முச்சக்கரவண்டி சாரதிகள், ஆசிரிய தொழிற்சங்கங்கள், இளைஞர்கள், நுவரெலியா பிரதேச சபையின் உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள் உட்பட பொதுமக்கள் எங்களுக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்கு முன்வந்துள்ளனர்" என அவர் குறிப்பிட்டுள்ளார். (நி-4)



வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளால் திருகோணமலை அலஸ்தோட்டத்தில் உணவு தவிர்ப்பு போராட்டம் நேற்று இடம்பெற்றது. காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் பதாகைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

## அகிம்சைப் போராட்டத்தில் கட்சி பேதமின்றி அணிதிரள்வோம்

### சிவசக்தி ஆனந்தன் அழைப்பு



(கிளிநொச்சி)

பொத்துவில் முதல் பொலிகண்டி வரையிலான போராட்டத்தின் இரண்டாவது நாளின் பேரணியானது இன்று முல்லைத்தீவு, வவுனியா, மன்னாரை வந்தடையவுள்ள நிலையில் கட்சி பேதங்களை மறந்து அனைவரும் அணிதிரண்டு வந்து ஆதரவு நல்குமாறு தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் பொதுச்செயலாளர் சிவசக்தி ஆனந்தன் பகிரங்க அழைப்பு விடுத்துள்ளார்.

அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடரில் இலங்கை மீது கொண்டுவரப்படவுள்ள புதிய பிரேரணை வலுவானதாக இருக்கும் அதேநேரம், பொறுப்புக்கூறல் விடயத்தினை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு பரிந்துரைப்பதற்கான செயற்பாடுகளும் முன்னெடுக்கப்பட வேண்டும்.

வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகள், அரசியல் கைதிகளின் உறவுகள் தமது அன்புக்குரியவர்களுக்காக போராட முடியாதவொரு சூழல் தற்போது எழுந்திருக்கின்றது. ஜனநாயக மறுதலிப்புக்கள் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளன.

படைத்தரப்பு இரும்புக்கரம் கொண்டு தமிழ் மக்களின் செயற்பாடுகளை ஒட்டுமொத்தமாக அடக்குவதற்கே முனைப்புக் காட்டுகின்றன.

பொத்துவில் முதல் பொலிகண்டி வரையிலான போராட்டம் ஆரம்பமானபோது இந்த செயற்பாடுகள் அப்பட்டமாக முழு உலகிற்குமே வெளிப்பட்டுள்ளது. அதுமட்டுமன்றி போராட்டங்களில் பொதுமக்கள் இணைந்து கொள்வதற்கு கொரோனா சட்டங்களை வைத்து பொலிஸார் தடைகளை விதிக்கின்றனர்.

அரசியல், சிவில் பிரதிநிதிகளுக்கு நீதிமன்றங்கள் ஊடாக தடைகளை ஏற்படுத்தி முடக்கும் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர். ஊடகவியலாளர்களைக் கண்காணிக்கும் செயற்பாடுகளும் வெகுவாக முன்னெடுக்கப்படுகின்றது.

ஒட்டுமொத்தமாக இரண்டாந்தரப் பிரஜைகளாக இருக்கும் தமிழ் சமூகத்தினை முழுமையாக இந்த நாட்டிலிருந்து துடைத்தெறிந்து விட வேண்டும் என்று கங்கணங்கட்டி அரசாங்கம் செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது.

பொறுப்புக்கூறலை, ஜனநாயக விழுமியங்களை, தனி மனித உரிமைகளை மறுதலிக்கும் கடும்போக்கு சிங்கள, பௌத்த தேசியவாத அரசாங்கத்தின் செயற்பாடுகளை அம்பலப்படுத்துவதற்காக அனைவரும் ஓரணியில் திரள வேண்டும்.

அடக்குமுறைகளையும் திட்டமிட்ட தடைகளையும் உடைத்தெறிந்து அனைவரும் போராட்டப்பேரணியில் கலந்து கொண்டு சர்வதேசத்திற்கு தமிழினத்தின் நியாயத்தினை மீண்டும் ஒருதடவை பலமாகச் சொல்ல வேண்டும். அதற்காக இந்த சந்தர்ப்பத்தில் பொதுமக்கள், சிவில் அமைப்புக்கள், மதத்தலைவர்கள், தமிழ்த் தேசியப்பரப்பில் உள்ள அரசியல் கட்சிகள் உள்ளிட்ட அனைவரும் பேதங்களை மறந்து கல ந்துகொள்ள வேண்டும் என்று பகிரங்க அழைப்பு விடுகின் றேன் என ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-4-250-299)

## குணமடைந்தோரின் எண்ணிக்கை 60 ஆயிரத்தைக் கடந்தது

(கொழும்பு)

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றில் இருந்து பூரண குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 60 ஆயிரத்தை கடந்துள்ளது.

கொரோனாத் தொற்றில் இருந்து மேலும் 684 பேர் பூரணமாக குணமடைந்து நேற்று வியாழக்கிழமை வீடுகளுக்கு திரும்பியுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதனையடுத்து, நாட்டில் இதுவரை கொரோனாத் தொற்றில் இருந்து குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 60 ஆயிரத்து 567 ஆக அதிகரித்துள்ளது. (நி-4)

# "சுரண்டாதே சுரண்டாதே தமிழர் நிலங்களைச் சுரண்டாதே" காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் யாழ். நகரில் ஆர்ப்பாட்டம்

(யாழ்ப்பாணம்)

நாட்டின் 73 ஆவது சுதந்திர தினமான நேற்று வியாழக்கிழமை வடக்கு-கிழக்கில் காணாமலாக்கப்பட்டோருக்கு நீதி கேட்டு காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளால் கரிநாள் கடைப்பிடிக்கப்பட்டது.



இந்நிலையில் நேற்று முற்பகல் யாழ்.மத்திய பேருந்து நிலையத்திற்கு முன்பாக யாழ்.மாவட்டக் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளினால் கறுப்புக் கொடிகள் ஏந்தி மாபெரும் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

நேற்று முற்பகல் 10 மணியளவில் ஆரம்பமான ஆர்ப்பாட்டம் பின்னர் பேரணியாக யாழ்.ஆஸ்பத்திரி வீதி, முனீஸ்வரன் வீதி, ஏ-9 வீதி வழியாக யாழ்.நகரில் அமைந்துள்ள யாழ்.முனியப்பர் ஆலய முன்றலில் நிறைவு பெற்றது.

இக்கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் மற்றும் பேரணியில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளுடன் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் மகளிர் அணியினர், முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் விந்தன் கனகரத்தினம் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

மேற்படி கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் "சிங்களவர்களுக்கு சுதந்திர தினம்...தமிழருக்கு கரிநாள், எங்கே? எங்கே? உறவுகள் எங்கே?, சுரண்டாதே! சுரண்டாதே! தமிழர் நிலங்களைச் சுரண்டாதே, தமிழர் தேசம் அங்கீகரிக்கப்பட வேண்டும்" உள்ளிட்ட பல வேறு கோஷங்களை எழுப்பித் தமது எதிர்ப்புக்களை வெளிப்படுத்தினர். (5-4-33-18)

## இரத்ததான முகாம்

(யாழ்ப்பாணம்)

கருகம்பனை இந்து இளைஞர் கழகம், தமிழ் மன்றம், சனசமூக நிலையம் மற்றும் விளையாட்டுக் கழகம் ஆகியன இணைந்து நடத்தும் 14 ஆவது இரத்ததான முகாம் நாளை மறுதினம் 7 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கருகம்பனை பொது நூலக மண்டபத்தில் காலை 8.30 மணி முதல் மாலை 3.30 மணிவரை இடம் பெறவுள்ளது.

எனவே குருதிக் கொடையாளர்களை கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர். (5-4)

## விசேட பூசை வழிபாடுகள்

(யாழ்ப்பாணம்)

உலகெங்கிலும் வாழும் மக்கள் கொரோனா வைரஸ் தாக்கத்திலிருந்து மீள்வதற்காக இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் இறை ஆசி வேண்டி விசேட பூசைகள் இடம்பெற்று வருகின்றன.

அந்த வகையில் நாளை 6 ஆம் திகதி சனிக்கிழமை காலை 6.30 மணிக்கு யாழ்ப்பாணம் சங்கானை வளக்கம்பரை ஸ்ரீமுத்துமாரி அம்மன் தேவஸ்தானத்தில் விசேட பூசை வழிபாடுகள் இடம்பெறவுள்ளன.

பூசை வழிபாடுகளின் நிறைவில் தேவஸ்தான பிரதம குருக்கள் சிவஸ்ரீ சு.ரங்கநாதக் குருக்களின் அருளாசி உரையும் வேதபாராயணமும் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச் சேவையில் இடம்பெறும் "ஆலய தரிசனம்" நிகழ்ச்சியில் காலை 6.30 மணிக்கு ஒளிபரப்புச் செய்யப்படும். (5-4)

## சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் வசதிகளை ஏற்படுத்தித் தருமாறு

### சுகாதார வைத்திய அதிகாரி கோரிக்கை

(சாவகச்சேரி)

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் மகப்பேற்றுக்கான வசதிகளை ஏற்படுத்த வேண்டும் என சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி எஸ். சுதோகுமார் கோரிக்கை விடுத்துள்ளார்.

அண்மையில் இடம்பெற்ற தென்மராட்சி பிரதேசத்தில் இடம்பெற்ற ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தின் போதே அவர் இக் கோரிக்கையை முன்வைத்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

சாவகச்சேரி பிரதேசத்தில் பிறக்கின்ற குழந்தைகளில் 6 வீதமான குழந்தைகள் மாத்திரமே சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் பிறக்கின்றன. ஏனைய கர்ப்பிணித் தாய்மாரை யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்ப வேண்டிய தேவை ஏற்படுகிறது.

தற்போது சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் குழந்தை பிரசவிக்கக்கூடிய நிலைமை இல்லை. அவ்வாறு பிரசவித்தால் அது தாய்க்கும், குழந்தைக்கும்பாதகமாக அமையலாம்.

எனவே தென்மராட்சிப் பிரதேச குழந்தைகள் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் பிறக்கக்கூடிய ஓர் நிலைமையை ஏற்படுத்தித் தர வேண்டும் என மேலும் அவர் தெரிவித்தார். (5-4-30)

## தீவக பாடசாலைகளில்

### ஆசிரியர் வெற்றிடங்கள் நிவர்த்தி

(யாழ்ப்பாணம்)

தீவக கல்வி வலயத்தில் நிலவிவந்த ஆசிரியர் வெற்றிடங்கள் நிவர்த்தி செய்யப்பட்டிருப்பதாக தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்தார். கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தின் போதே அவர் இதனைத் தெரிவித்திருந்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

தீவக கல்வி வலய பாடசாலைகளில் நிலவி வந்த ஆங்கிலம், கணிதம் மற்றும் விஞ்ஞான பாட ஆசிரியர்கள் வெற்றிடம் 90சதவீதம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

மூன்று வருட காலமாக பாடசாலை ஒன்றில் நிரந்தர கணித பாட ஆசிரியர் இல்லை என்ற குறைபாடு அண்மையில் இடம்பெற்ற பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் தெரியப்படுத்தப்பட்டது.

அதன் விளைவாக குறித்த பாடசாலைக்கு தற்போது கணித பாட ஆசிரியர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

அதேவேளையில் ஆசிரியர் பயிற்சிக்குச் சென்ற ஆசிரியர்கள் 35பேர் எமது கல்வி வலயத்திற்குள் கடமையாற்றவுள்ளனர். இதனூடாக ஆரம்பக்கல்வி ஆசிரியர் பற்றாக்குறை நிவர்த்தி செய்யப்படும். அதனை விட எமது கல்வி வலயத்திற்குள் ஆறு பாடசாலைகள் தவிர்ந்த ஏனைய பாடசாலைகளுக்கு திறன் வகுப்பறை கிடைக்கப்பெற்றுள்ளது.

தீவக பிரதேசத்தில் வகுப்பறைக் கட்டடங்களுக்கான தேவைப்பாடு அதிகரித்துக் காணப்படுகிறது. எனவே அதனை முன்னுரிமை அடிப்படையில் அதனை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என மேலும் அவர் தெரிவித்தார். (5-30)

## வழங்கப்படும் வளங்களை முழுமையாக பயன்படுத்த வேண்டும்

(சாவகச்சேரி)

எமது பிரதேச வளங்கள் எமது பிரதேச அபிவிருத்திக்கே பயன்படுத்தப்பட வேண்டும் என சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் ம.நடனதேவன் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குள் வீதிகளை காப்பெற் வீதிகளாக மாற்றும் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டு வருகிறது. இதன்போது மிகுதியாக வரும் மணல்களை வேறு பகுதிக்கு எடுத்துச் செல்வதனையோ அல்லது விற்பனை செய்வதனையோ அனுமதிக்கக் கூடாது. இது தொடர்பாக நகர சபை உரிய திணைக்களங்களுக்கு தெரியப்படுத்த வேண்டும்.


சாவகச்சேரி நகரசபை எல்லைக்குள் வீதி அபிவிருத்திப் பணிகளின் போது மிகுதியாக வரும் மணலை சாவகச்சேரி பொது விளையாட்டு மைதான அபிவிருத்திக்குப் பயன்படுத்த வேண்டும்.

சாவகச்சேரி பொது விளையாட்டு மைதானம் மழை காலங்களில் நீர் தேங்கி பயன்படுத்த முடியாத நிலைமையில் காணப்படுவதாக அவர் மேலும் தெரிவித்தார். (5-4)



புத்தூர் பொது நூலகத்தினால் 2020 ஆம் ஆண்டுக்குரிய வாசிப்பு மாதப் போட்டிகள் புத்தூர் பிரதேச சபைக்கு உட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு அண்மையில் நடத்தப்பட்டது.

# நாடு பிளவுபட்டதற்கு அரசியல்வாதிகளே பொறுப்பு



(கொழும்பு)

சுதந்திரத்தின் பின்னர் நாட்டை உலக வல்லரசுகளுக்கு கடனாளியாக மாற்றியதற்கும் நாட்டு மக்களைப் பிளவு படுத்தியதற்கும் அன்று முதல் இன்று வரையில் ஆட்சி செய்த அரசியல்வாதிகளே பொறுப்புக்கூற வேண்டும் என கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

நாட்டில் உள்ள அனைத்து பிரிவினர்களும் ஒன்றிணைந்து பிரச்சினைகளை தீர்க்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

சுதந்திர தினத்தை முன்னிட்டு நேற்று இடம்பெற்ற ஆராதனைகளின் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (நி-4)

# அத்தியாவசிய பொருட்களின் விலையினை நிலையான தன்மையில் பேண ஒப்பந்தம் கைச்சாத்து

## தனியார்துறை நிறுவனங்களும் முன்வந்துள்ளன

(கொழும்பு)

**27 அத்தியாவசிய பொருட்களின் விலையினை எதிர்வரும் 3 மாத காலத்துக்கு நிலையாக பேண தேசிய உற்பத்தியாளர்கள், சிறு ஏற்றுமதி உற்பத்தியாளர்களுக்கிடையில் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.**

கடந்த காலத்தை விட தற்போது அத்தியாவசிய உணவு பொருட்களின் விலை குறைவடைந்துள்ளது. தெரிவு செய்யப்பட்ட உணவு பொருட்களை நிவாரண விலையில் விற்பனை செய்ய கவனம் செலுத்தப்பட்டுள்ளது என வர்த்தகத்துறை அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

வர்த்தகத்துறை அமைச்சில் நேற்று முன்தினம் இடம் பெற்ற ஒப்பந்தம் கைச்சாத்திடல் நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அத்தியாவசிய பொருட்களின் விலையினை நிலையாக பேண தனியார் துறையினர் முன்வந்துள்ளமை இதுவே முதற்தடவையாகும். அத்தியாவசிய பொருட்களின் விலைகளை குறைத்து தரமான உணவு மற்றும் அத்தியாவசிய பொருட்களை நுகர்வோருக்கு விநியோகிக்க உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய எதிர்வரும் 3 மாத காலத்துக்கு சிவப்பு அரிசி,வெள்ளை அரிசி,வெள்ளை நாட்டரிசி, சம்பா, கீரி சம்பா, கோதுமை மா, வெள்ளை சீனி, சிவப்பு சீனி, தேயிலை தூள், சிவப்பு பருப்பு, பெரிய வெங்காயம்-இந்தியா, கடலை, உருளை கிழங்கு, உருளை கிழங்கு(பாகிஸ்தான்), உலர் மிளகாய், டின்மீன், நெத்தலி, கோழி இறைச்சி, மற்றும் உப்பு, பால்மா, சோயா எண்ணெய் , சவர்க்காரம் உள்ளிட்ட 27 அத்தியாவசியப் பொருட்களின் விலையினைப் பேணுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அத்தியாவசிய பொருட்களை சதொச மற்றும் க்யூ-சொப் ஊடாக குறைந்த விலையில் பெற்றுக்கொள்ள முடியும். வாழ்க்கை செலவுகள் அதிகம் என எதிர்த்தரப்பினர் மாத்திரம் குற்றச்சாட்டுக்களை முன்வைக்கிறார்கள். கொவிட் -19 வைரஸ் தாக்கத்தினால் இறக்குமதி செய்யப்படும் பொருட்களின் விலை மாத்திரமே சற்று அதிகமாக காணப்படுகிறது. அதனையும் எதிர்வரும் நாட்களில் சீர்செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என அவர் தெரிவித்தார். (நி-4)

# காலி துறைமுகத்தின் 7 ஏக்கர் நிலப்பரப்பு குத்தகைக்கு

(கொழும்பு)

இலங்கை துறைமுக அதிகாரசபையின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ள கிழக்கு முனையம் எதிர்வரும் 2023 ஆண்டிற்குள் முழுமையாக அபிவிருத்தி செய்யப்படும் என அந்த அதிகார சபையின் தலைவர் ஜெனரல் தயா ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் வைத்து ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதில் வழங்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். இதேவேளை, காலி துறைமுகத்தின் சுமார் 7 ஏக்கர் நிலப்பரப்பை தனியார் பிரிவிற்கு 30 வருடங்களுக்கு குத்தகைக்கு வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

காலி துறைமுகத்தில் சிறிய படகு தளத்தை செயற்படுத்துவதற்காக இந்த பகுதியை வழங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக துறைமுக அதிகார சபையின் தொழில்நுட்ப பிரிவின் பணிப்பாளர் சுசந்த அபேசிறிவர்தன தெரிவித்தார். நாட்டின் சுற்றுலா தொழிற்றுறையை ஊக்குவிக்கும் நோக்கில் சிறிய படகு தளத்தை செயற்படுவத்துவதற்காக தனியார் பிரிவிற்கு குத்தகைக்கு வழங்க தீர்மானித்துள்ளதாகவும் எனினும் துறைமுகத்தின் ஏனைய நடவடிக்கைகளுக்கு இதனால் எந்தவித அழுத்தங்களும் ஏற்படாது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (நி-4)


**சிறுநீரகம் தேவை**

AB+ குருதி வகையைச் சேர்ந்த ஒருவருக்கு அவசரமாக சிறுநீரகம் தேவை.

தொடர்பு:- 074 199 4432

(5529)



வாழ்க வையகம் குருவே துணை வாழ்க வளமுடன்



**அன்பர்களின் வேண்டுகோளுக்கிணங்க மீண்டும் மனவளக்கலை யோகப்பயிற்சிகள் ஆரம்பமாகின்றன**

யாழ்ப்பாணம் மனவளக்கலை மன்ற அறக்கட்டளை யாழ்ப்பாணம் அறிவுத்திருக்கோவில், நோய்க்கிருமி பரவும் தற்கால சூழ்நிலையில் விஞ்ஞானிகளும் வைத்தியர்களும் சுகாதாரத்துறை சார்ந்த அனைவரும் மக்களுக்கு அறிவுறுத்துவது உங்களது நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரித்துக்கொள்ளுங்கள் என்பதே. அதனை வழங்குவதே அருட்தந்தை வேதாத்திரி மகரிஷி அவர்களின் மளவளக்கலை யோகப்பயிற்சிகளாகும். எனவே பயிற்சியினைப் பெற்று பலன்பெற அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

- எளியமுறை உடற் பயிற்சிகள்
- எளியமுறை தியானப் பயிற்சிகள்
- காயகல்பப் பயிற்சிகள்
- அகத்தாய்வுப் பயிற்சிகள்

**காலம் : எதிர்வரும் 06.02.2021 சனிக்கிழமை தொடக்கம் 12.02.2021 வெள்ளிக்கிழமை வரை**

**நேரம்: மாலை 5.00 மணி தொடக்கம் இரவு 7.00 மணி வரை**

**பயிற்சி வழங்குபவர் : துணைப்பேராசிரியர் த.நந்தகுமரன் அவர்கள்**

குறிப்பு : கொவிட் -19 சமூகபாதுகாப்பு விதிகளுக்கமைவாக பயிற்சிகள் வழங்கப்படுவதால் மட்டுப்படுத்தப்பட்ட பயிற்சியாளர்களே உள்வாங்கப்படுவர்.

அகத்தாய்வு 1ம் நிலை 06.02.2021 சனி மற்றும் 07.02.2021 ஞாயிறு ஆகிய தினங்களில் காலை 9.00 மணிக்கு நடைபெறும்.

தொடர்புகளிற்கு : யாழ்ப்பாணம் அறிவுத்திருக்கோவில்
இல.81, பிறவுண் வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில், யாழ்ப்பாணம்
தொ.இல. - 021 222 2772

(C-1355)



021 221 7603, 021 567 1532
வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு



**PEARSON** INTERNATIONAL COLLEGE

Diploma in English
IELTS Acadamic
IELTS General
IELTS Life skills.

#1 rated professional Lecturers
Weekday classess
Weekend Classess
Night Classess
# 100% Student focused.
Registered exam centre

Especially designed lessons for students who are willing to migrate foreign countries

idp | IELTS

Register with us for IELTS Exam@ 29,999/=
074 188 7878-021 223 2250
infopearsonicollege@gmail.com (5417)

No.21,Ponnampalam Street 3rd lane, Power house road, jaffna



**பளை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கம் (வ-து)**

**பதிவு இல:PA/52 பதிவு திகதி 18.03.1972**

**ஓய்வுபெற்ற/விலகிய/சேவையிலுள்ள பணியாளர்களின் விபரமற்ற பிணைப்பணம்,பிணைவட்டி தொடர்பான விபரம் கோரல்**

எமது சங்கத்தில் பணியாற்றி ஓய்வுபெற்ற / பதவி விலகிச் சென்ற மற்றும் 2010க்கு முன்னர் பணியில் இணைந்து சேவையிலுள்ள பணியாளர்களுக்கான பிணைப்பணம், பிணைவட்டி கொடுப்பனவு தொகைகளை நிர்ணயம் செய்வதற்காக பிணைப்பணம் செலுத்தப்பட்டதற்கான ஆதாரப்படுத்தக்கூடிய ஆவணங்களுடன் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவினால் நியமனம் செய்யப்பட்ட குழுவிற்கு சமர்ப்பிப்பதற்காக 2021.02.09 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு சமுகமளிக்கும்படி கேட்டுக் கொள்கின்றேன்.

குறிப்பு:-இறந்த பணியாளர்களின் அல்லது வெளிநாடுகளில் வதியும் பணியாளர்கள் தொடர்பில் ஆதாரப்படுத்தக்கூடிய பிணைப்பண ஆவணங்களை அவர்களின் பின்னுரித்தாளர்கள் சமர்ப்பிக்க முடியும்.

(C-1349)

**க.இராசதுரை, தலைவர்,**
**பளை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கம், கண்டி வீதி - பளை.**
**தொலைபேசி இல.:- 021 320 7697**

# காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளால் உண்ணாவிரதப் போராட்டம் முன்னெடுப்பு



(நெளுக்குளம்)

**வடக்கு-கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் நாட்டின் சுதந்திர தினமான நேற்றைய தினத்தை கரிநாக பிரகடனப்படுத்தி வடக்கு-கிழக்கில் பல்வேறு பிரதேசங்களில் போராட்டங்கள் முன்னெடுத்தனர்.**

அந்த வகையில் வவுனியாவில் அடையாள உணவு தவிர்ப்பு போராட்டம் ஒன்றை வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் சங்கத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்டது.

அதற்கு வவுனியா தலைமை பொலிஸ் நிலையத்தால் நீதிமன்றில் தடை உத்தரவு வழங்கப்பட்டதுடன் வவுனியா பொலிஸ் பிரதேசத்திற்குள் ஆர்ப்பாட்டம் எதனையும் நடத்த வேண்டாம் என்றும் உத்தரவு வழங்கப்பட்டிருந்தது.

எனினும் குறித்த உத்தரவையும் மீறி அடையாள உண் ணாவிரத போராட்டம் நேற்று முன்னெடுக்கப்பட்டது. முற்பகல் 10 மணிக்கு பழைய பேருந்து நிலையப்பகுதிக்கு முன்பாக ஒன்றுகூடிய உறவுகள் ஆர்ப் பாட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்ததுடன் அதனை தொடர்ந்து உண்ணாவிரத போராட்டத்தை ஆரம்பித்தனர்.

குறித்த ஆர்ப்பாட்டங்களில் பாராளுமன்ற உறுப்பினர்கள், அரசியல் கைதிகள், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டு தமது ஆதரவை வழங்கினர். (5-4-100-315-299-250-316)

## சட்டவிரோத மணல் கடத்தல் சாரதி தப்பியோட்டம்

(கரணவாய்)

சட்டவிரோதமாக மணல் ஏற்றி வந்த கன்டர் வாகனத்தைப் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். இச்சம்பவம் நேற்று நெல்லியடிப் பகுதியில் இடம்பெற்றது.

குற்றச் செயல்களைத் தடுக்கும் நோக்கில் நேற்று அதிகாலை கடமையில் ஈடுபட்ட வேளை சட்டவிரோதமாக மணல் ஏற்றிவந்த கன்டரை மறித்தனர். வாகனத்தின் சாரதி வாகனத்தை நிறுத்தி விட்டு தப்பிச் சென்றுள்ளார். மணலுடன் வாகனத்தை கைப்பற்றிய பொலிஸார் சாரதியை தேடி வருகின்றனர். (5-4-60)

## யோக பயிற்சி ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மனவளக் கலை மன்ற அறக்கட்டளை யாழ்ப்பாணம் அறிவுத் திருக் கோவிலில் மனவளக்கலை யோகப் பயிற்சிகள் ஆரம்பிக் கப்படவுள்ளன.

இப்பயிற்சிகள் நாளை 6 ஆம் திகதி சனிக்கிழமை முதல் 12 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை மாலை 5 மணி முதல் இரவு 7 மணிவரை துணைப் பேராசிரியர் த.நந்த குமாரனினால் வழங்கப்படும்.

மேலதிக விபரங் களுக்கு 021 222 2772 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். (5-4)

## போராட்டம் தொடர்பாக வடமாகாண ஏற்பாட்டு குழுவினரிடையே கலந்துரையாடல்

(குப்பிழான்)

வடக்கு-கிழக்கில் அதிகரித்து வரும் அரசின் திட்டமிட்ட ஆக்கிரமிப்பு மற்றும் அடக்குமுறைகளுக்கு எதிராகப் பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை முன்னெடுக்கப்படும் அகிம்சை ரீதியிலான மாபெரும் போராட்டம் தொடர்பான வடமாகாண ஏற்பாட்டுக் குழுவினருக்கு இடையிலான கலந்துரையாடல் நேற்று வியாழக்கிழமை யாழ்ப்பாணம் தந்தை செல்வா கலையரங்கு மண்டபத்தில் இடம் பெற்றது.

மேற்படி போராட்டத்தின் வடமாகாண இணைப்பாளர் சி.இளங்கோவன் தலைமையில் குறித்த கலந்துரையாடல் இடம் பெற்றது.

குறித்த கலந்துரையாடலில் கவனயீர்ப்புப் போராட்டம் தொடர்பில் வடமாகாணத்தில் மேற்கொள்ளப் பட்டுள்ள ஏற்பாடுகள் மற்றும் மேற்கொள்ளப்பட வேண்டிய ஏற்பாடுகள் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டன.

குறிப்பாக யாழ். மாவட்டத்தில் யாழ்.நகரம், தென்மராட்சி, வடமராட்சி என ஒவ்வொரு பிரதேசங்கள் ரீதியாகவும் மேற்கொள் ளப்பட வேண்டிய ஏற்பாடுகள் தொடர்பிலும் அதிக கவனம் செலுத்தப்பட்டது.

குறித்த போராட்டம் நாளை சனிக்கிழமை பொலிகண்டியைச் சென்றடையும் எனவும் பொலிஸாரால் தடைகள் ஏற்படுத்தக் கூடும் என்பதால் போராட்டம் பொலிகண்டியில் இறுதியாகச் சென்றடையும் இடத்தை இறுதி வரை பகிரங் கப்படுத்தாதிருப்பதற்கு தீர் மானிக்கப் பட்டுள்ளது. (5-4-18)



கிளிநொச்சி மாவட்ட செயலக வளாகத்தில் அமைக்கப்பட்ட நூலகம் வடமாகாண ஆளுநரால் நேற்று திறந்து வைக் கப்பட்டது. அத்துடன் மரக்கன்றுகளும் நாட்டி வைக்கப்பட்டன. (படம்-சப்தசங்கரி)

## தேர்வு ஒத்திவைப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி தமிழ்ச் சங்கத்தினால் நாளை 6 ஆம் திகதி நடத்தப்படவிருந்த திருக்குறள் தமிழ் இலக்கியத் திறன் தேர்வு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

தற்போது கல்வித்திணைக் களத்தினால் க.பொ.த.சா.த. மாணவர்களுக்கு முன்னோடித் தேர்வு நடைபெறுவதால் குறித்த தேர்வு எதிர்வரும் 13 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது என சங்கத் தலைவர் மருத்துவ கலாநிதி மா.ஜெயராசா அறிவித்துள்ளார். (5-4)

## வவுனியாவைச் சேர்ந்த கைதியும் விடுதலை

(குருமன்காடு)

73 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் பொது மன்னிப்பின் கீழ் நாடு பூராகவும் 146 சிறைக்கைதிகள் நேற்று விடுதலை செய்யப்பட்டனர்.

அந்த வகையில் வவுனியாவைச் சேர்ந்த கைதி ஒருவரும் விடுவிக்கப்பட்டுள்ளார்.

வவு னியா சிறைச்சாலை பொறுப்ப திகாரி என்.பிபாக ரன் தலைமையிலான சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் குறித்த கைதியை விடுதலை செய் தனர்.

விடுதலை செய்யப்பட்ட கைதிக்கு பி.சி.ஆர்.பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்ட பின்பே விடுதலை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (5-4-250)

## 10 அடிக்கு மேல் வளர்ந்த வெண்டிச் செடி



(குப்பிழான்)

காரைநகர் வாரிவளவைச் சேர்ந்த நடேசன் என்ற விவசாயி தனது வீட்டுத் தோட்டத்தில் 10 அடி உயரத்திற்கு மேல் வளரும் பாரம்பரிய வெண்டி இனமொன்றை பயிரிட்டுத் தற்போது பராமரித்து வருகின்றார்.

இவ் வெண்டி இனம் வருடத்தில் 12 மாதங்களும் காய்காய்க்கும் தன்மை கொண்டது. (5-4-18)



இலங்கையின் 73 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு நேற்று வவுனியா மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் 5300 மரக்கன்றுகள் நாட்டப்பட்டன. இதில் வவுனியா மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவர் கு.திலீபன் மற்றும் மாவட்ட அரச அதிபர் சமன்பந்துல சேன ஆகியோர் கலந்து கொண்டனர். (படம்:-வசந்தரூபன்)

# இராசிபலன்

05.02.2021
தை 23, வெள்ளிக்கிழமை
அட்டமி முற்பகல் 11.44 மணிவரை
விசாகம் முன்னிரவு 7.54 மணிவரை
சுபநேரம் 6.35-8.05 மணிவரை
இராகுகாலம் 11.05-12.35 மணிவரை
சந்திராஷ்டமம்: ரேவதி, அச்சுவினி
அட்டமி-நவமி வளவன்


மேஷம்

வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், ஆரோக்கியத்தில் கவனம் தேவை, எடுத்த காரியங்களை முடிக்க அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை ஏற்படலாம்.


ரிஷபம்

நண்பர்களால் வளர்ச்சி கூடும் நாள், மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், வழிபாட்டில் ஆர்வம் கூடும் நாள்.


மிதுனம்

தன்னம்பிக்கையும், தைரியமும் அதிகரிக்கும் நாள், கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம், வீட்டை அழகாக வைத்திருப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், காரிய அனுகூலமுண்டு.


கடகம்

மனதிற்கினிய சம்பவங்கள் நடைபெறும் நாள், பெற்றோர் மீதான பாசம் கூடும், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள்.


சிம்மம்

தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம், வாகன சுகமுண்டு, உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், சிந்தித்து செயற்பட்டு சிறப்புக்களைக் காணும் நாள்.


கன்னி

கொடுக்கல்- வாங்கல்கள் ஒழுங்காக வள்ளல்களின் உதவியை நாடுவார்கள், தன்னம்பிக்கை துளிர்விடும் நாள், ஆரோக்கியத்தில் கொஞ்சம் அக்கறை காட்டுவீர்கள், பிணக்குகளில் திசை திருப்பங்கள் ஏற்படலாம்.


துலாம்

சுபகாரியப் பேச்சுக்கள் நல்ல முடிவுக்கு வரலாம், விலை உயர்ந்த பொருட்களை வாங்கும் வாய்ப்புண்டு, புதிய பொறுப்புக்களும் பதவிகளும் வந்து சேரலாம், வாக்கு மேன்மையுண்டு.


விருச்சிகம்

விரும்பிய காரியம் விரும்பிய படியே நடைபெறலாம், குடும்ப உறுப்பினர்களை அனுசரித்துச் செல்வது நல்லது, தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், போசன சுகமுண்டு.


தனுசு

மாற்றங்களால் ஏற்றம் பெறுவீர்கள், நண்பர்கள் வழியில் சுப விரயங்கள் ஏற்படலாம், தொழில்நலன் கருதிய பயணங்கள் இடம் பெறலாம், சயனசுகக் குறைவான நாள்.


மகரம்

வீட்டுத் தேவைகளை எளிதில் பூர்த்தி செய்து கொள்வீர்கள், பொது வழியில் மதிப்பும் மரியாதையும் உயரும், குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும், வருமானம் திருப்திதரும் வகையில் அமையும்.


கும்பம்

எதிர்கால நலன்கருதி புதிய திட்ட மொன்றைத் தீட்டுவீர்கள், மகிழ்சிதரும் செய்திகள் வந்து சேரலாம், பொழுது போக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.


மீனம்

வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், அன்பால் சாதித்துக் காட்டும் நாள், அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், வரவேண்டிய பாக்கிகள் வந்து சேரலாம்.

ஆழம் பார்த்துக் காலை விடு.

# பொத்துவில்- பொலிகண்டி போராட்டம்; காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளும் இணைந்தனர்


(மட்டக்களப்பு)

**தமிழர்களின் உரிமை மறுப்புக்கு எதிரான பேரணி மட்டக்களப்பு நகரை வந்தடைந்த போது கையில் கறுப்புக் கொடி ஏந்தியவாறு வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவினர்கள் இணைந்து கொண்டனர்.**

பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான தமிழர்களின் உரிமை மறுப்புக்கு எதிரான எழுச்சிப் போராட்டம் மட்டக்களப்பு நகரினை வந்தடைந்தது.

இந்தப் போராட்டம் நேற்று முன்தினம் காலை பொத்துவில் நகரில் ஆரம்பமான நிலையில், அம்பாறை பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப் படையினரின் தடைகளைத் தாண்டி வந்து, மட்டக்களப்பு நகரினை நேற்றுக் காலையில் சென்றடைந்தது.

மட்டக்களப்பு நகரில் பெரும் எழுச்சியுடன் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டதுடன் கல்லடிப் பாலம் ஊடாக பேரணி மட்டக்களப்பைச் சென்றடைந்தபோது பெருமளவான வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் கறுப்புக்கொடிகளை ஏந்தியவாறு பேரணியுடன் கலந்துகொண்டனர். (நி-4)



# சுதந்திர தினத்தை முன்னிட்டு இராணுவத்தினருக்கு பதவி உயர்வு

(கொழும்பு)

இலங்கையின் 73 ஆவது தேசிய சுதந்திர தினத்தை முன்னிட்டு இராணுவத்தினருக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

அதன்படி 337அதிகாரிகள் உட்பட 8,603 இராணுவ வீரர்கள் தங்களின் அடுத்த உயர் பதவிக்கு தரமுயர்த்தப்பட்டுள்ளதாக இராணுவத் தலைமையகம் தெரிவித்துள்ளது.

பாதுகாப்பு அமைச்சின் பரிந்துரைகள் மற்றும் பாதுகாப்பு பதவி நிலைப் பிரதானியும், இராணுவ தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வா ஆகியோரின் பரிந்துரைகளின் அடிப்படையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் இந்த பதவி உயர்வுகள் வழங்கப்பட்டுள்ளன. (நி-4)


# எதிர்க்கட்சி ஆசனத்தில் உட்கார ரணிலே தகுதியானவர்- மகிந்த நற்சான்று

(கொழும்பு)

ரணில் விக்ரமசிங்க பாராளுமன்றத்திற்கு வருகை தருகின்றமை அரசியல் ரீதியில் அரசாங்கத்திற்கு நன்மை இல்லாதது என்றாலும், அவர் பாராளுமன்றத்தில் இருக்க வேண்டிய ஒருவர் என பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஆங்கில ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். அந்த செவ்வியில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது.

ஐக்கிய தேசியக் கட்சியில்,



அதன் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை தவிர, வேறு எந்தவொரு நபருக்கும் பாராளுமன்றத்திற்கு பிரவேசிப்பதற்கான தகுதி கிடையாது. அத்துடன் எதிர்க்கட்சித் தலைவர் பதவிக்கு தகுதியான நபர், ரணில் விக்கிரமசிங்கவே.

வலுவான எதிர்க்கட்சியொன்று அனைத்து சந்தர்ப்பங்களிலும் தேவை. எனினும் தற்போதைய எதிர்க்கட்சி பயனற்றதாகும்.

வலுவான எதிர்க்கட்சி யொன்று இருக்கும் போது, அரசாங்கம் அனைத்து சந்தர்ப்பங்களிலும் சரியான ஆட்சி முறையொன்றை கொண்டு செல்வதுடன், சவால் விடுக்கவும் முடியும் என அவர் தெரிவித்துள்ளார். (நி-4)

# வனப் பகுதியை அதிகரிக்க தீர்மானம்

(கொழும்பு)

15 மாவட்டங்களில் உள்ள 69 காடுகளை பாதுகாக்கப்பட்ட வனப்பகுதியாக அறிவிக்கும் வர்த்தமானியில்வனப்பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் விமலவீர திஸாநாயக்க கையொப்பமிட்டார். 30 சதவீதமாக வனப்பகுதி அதிகரிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வனப்பகுதிகளைப் பாதுகாக்கும் நோக்கிலே 15 மாவட்டங்களில் உள்ள 69 காடுகள் பாதுகாக்கப்பட்ட வனப் பகுதியாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

வனப் பாதுகாப்பு தொடர்பில் நடைமுறையில் உள்ள சட்டத்தை திருத்தியமைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வனமீள் புத்தாக்கம் தொடர்பில் சுபீட்சமான எதிர்கால கொள்கைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை செயற்படுத்தும் வகையில் இத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. (நி-4)

# உள்ளூராட்சிமன்ற பங்கேற்பு அபிவிருத்தித்திட்டம் தொடர்பான கலந்துரையாடல்கள்

(யாழ்ப்பாணம்)

2019 ஆம் ஆண்டில் நல்லூர் பிரதேச சபையினால் தயாரிக்கப்பட்ட உள்ளூராட்சிமன்ற பங்கேற்பு அபிவிருத்தி திட்டத்தில் மீளாய்வு மேற்கொள்வதற்கான கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது.

எனவே இக்கலந்துரையாடலில் பொதுமக்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் ஆர்வமுடையோரைக் கலந்து கொண்டு கருத்துக்களையும் ஆலோசனைகளையும் வழங்குமாறு நல்லூர் பிரதேச சபைத் தவிசாளர் ப.மயூரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அந்தவகையில் எதிர்வரும் 9 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் கோண்டாவில் மத்தி தில்லையம்பதி சிவகாமி அம்மன் திரு மண மண்டபத்தில் 2 ஆம் வட்டார கலந்துரையாடலும் கோண்டாவில் சி.சி.த.க.பாடசாலையில் 3 ஆம் வட்டார கலந்துரையாடலும் கொக்குவில் ஞானபண்டிதா வித்தியாலயத்தில் 4 ஆம் வட்டார கலந்துரையாடலும் கொக்குவில் வளர்மதி சனசமூக நிலையத்தில் 6 ஆம் வட்டார கலந்துரையாடலும் கொக்குவில் நாமகள் வித்தியாலயத்தில் 7 ஆம் வட்டார கலந்துரையாடலும் திருநெல்வேலி முத்துதம்பி மகா வித்தியாலயத்தில் 8 ஆம் வட்டார கலந்துரையாடலும் இடம்பெறவுள்ளன.

மேலும் எதிர்வரும் 10 ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் கோண்டாவில் நெட்டிலிப்பாய் பிள்ளையார் ஆலய திருமறை மண்டபத்தில் முதலாம் வட்டார கலந்துரையாடலும் கொக்குவில் பிடாரிஅம்மன் மண்டபத்தில் 5 ஆம் வட்டார கலந்துரையாடலும் யா/திருநெல்வேலி பரமேஸ்வரா வித்தியாலயத்தில் 9 ஆம் வட்டார கலந்துரையாடலும் கல்வியங்காடு செங்குந்தா இந்துக் கல்லூரியில் 10 ஆம் வட்டார கலந்துரையாடலும் அரியாலை ஜெயபாரதி சனசமூக நிலையத்தில் 11 ஆம் வட்டார கலந்துரையாடலும் நாவலடி உதயஒளி முன்பள்ளியில் 12 ஆம் வட்டார கலந்துரையாடலும் இடம்பெறவுள்ளன என நல்லூர் பிரதேச சபைத் தவிசாளர் ப.மயூரன் தெரிவித்துள்ளார். (5-4)

## 'ஒரு வங்கி ஒரு கிராமம்' யாழில் ஆரம்பம்




(யாழ்ப்பாணம்)

சுபீட்சத்திற்கானதிருப்புமுனை எனும் தொனிப்பொருளில் மத்திய வங்கியின் அனுசரணையுடனும் மக்கள் வங்கியின் இணை அனுசரணையுடனும் 'ஒரு வங்கி ஒரு கிராமம்' ஆரம்ப நிகழ்வு நேற்று யாழ்ப்பாணத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் வடமாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சாள்ஸ் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் ஆகியோர் பிரதம விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர்.

இதன்போது மூன்று அங்கத்தவர்கள் பணம் வைப்பில் இட்டதுடன் மூவருக்கும் தலா 2 இலட்சம் ரூபாய் வீதம் சுயதொழில் கடனும் வழங்கி வைக்கப்பட்டது. (5-4)



சற்குரு தியாகராஜ சுவாமிகளின் 174 ஆவது இசை ஆராதனை யாழ். இந்துசமயப் பேரவையில் அதன் தலைவர் ஈசான.சி. சக்திகிரீவன் தலைமையில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக இந்தியத் துணைத்தூதுவர் பாலசந்திரனும் சிறப்பு விருந்தினராக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மாவை. சேனாதிராஜாவும் கலந்துகொண்டனர்.

## மத்தியஸ்தர் சபை

(கரணவாய்)

வடமராட்சி வடக்கு பருத்தித்துறை மத்தியஸ்தர் சபை நாளை மறுதினம் 7 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியாலய பழைய மாணவர்சங்கக் கட்டடத்தில் நடைபெறவுள்ளது.

பொதுமக்கள் சுகாதார வழிமுறைகளுக்கு அமைவாக சமூக இடைவெளியைப் பேணி மத்தியஸ்தர் சபைக்கு சமுகமளிக்குமாறு சபையின் தவிசாளர் ஜி.வாசுதேவன் அறிவித்துள்ளார். (5-4-60)


# வடக்கில் இடம்பெற்ற சுதந்திரதின நிகழ்வுகள்



யாழ்ப்பாணம்



கிளிநொச்சி



வவுனியா



மன்னார்



முல்லைத்தீவு

வடமாகாணத்தில் மாவட்ட செயலகங்களில் இடம்பெற்ற நாட்டின் 73 ஆவது சுதந்திர தின நிகழ்வுகள்.

(படங்கள்:- சிவசாந்தன், யோசப்நயன், சப்தசங்கரி, தேவாநந்தன், சதீஸ், வசந்தரூபன்)


# மியன்மாரில் இராணுவ ஆட்சி தோல்வியடைய

# ஐ.நா.எல்லா விதத்திலும் முயற்சி செய்யும்

## உலக நாடுகள் கடும் அழுத்தம் கொடுக்க வேண்டும்

**(நெற்பிட்டோ)**

**மியன்மாரில் சதிப் புரட்சி மூலம் இராணுவம் ஆட்சியைக் கைப்பற்றியுள்ளமைக்கு ஐ.நா.பொதுச் செயலர் அன்டோனியோ குட்டேரஸ் கண்டனம் தெரிவித்துள்ளார்.**



இந்த ஆட்சிக் கவிழ்ப்பு தோலவியடைவதை உலக நாடுகள் உறுதி செய்ய வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

ஜனநாயக ரீதியாக நடைபெற்ற தேர்தலில் மக்களால் வழங்கப்பட்ட ஆணையை யாரும் புறக்கணிப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது. ஒரு நாட்டை இப்படி ஆட்சி செய்யக் கூடாது என ஆட்சிக்கவிழ்ப்பு நடத்திய இராணுவத் தலைவர்களுக்கு புரிய வைக்க வேண்டுமெனவும் அவர் கூறியுள்ளார்.

மியன்மாரில் அரசியலமைப்புச் சட்டம் மீண்டும் நிறுவப்பட வேண்டும் எனவும் ஐ.நா. பொதுச் செயலர் அன்டோனியோ குட்டேரஸ் அழைப்பு விடுத்துள்ளார்.

மியன்மாரில் இராணுவ ஆட்சி தோல்வியடைய ஐ.நா. சபையால் முடிந்த அனைத்தையும் செய்வோம். சர்வதேச சமூகத்தில் இருக்கும் முக்கிய நாடுகள் மூலம் மியன்மாருக்கு கடுமையான அழுத்தம் கொடுக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, அதிகாரத்தைக் இராணுவம் கைப்பற்றியுள்ளமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து கூட்டறிக்கை ஒன்றை வெளியிட ஐ.நா. பாதுகாப்புச் சபை மேற்கொண்ட முயற்சி சீனா மற்றும் ரஷ்யாவின் எதிர்ப்பினால் தோல்வியடைந்துள்ளது.

ரோஹிஞ்ய முஸ்லிம்கள் மீதான நடவடிக்கையை இன அழிப்பு என ஐ.நா.பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்டேரஸ் கண்டித்தார். அத்துடன் மேற்குலக நாடுகளும் மியன்மார் இராணுவத்தின் ரோஹிஞ்ய முஸ்லிம்கள் மீதான தாக்குதலை இன அழிப்பு எனக் கண்டித்தன. எனினும் தன் மீதான குற்றச்சாட்டுக்களை மியன்மார் இராணுவம் மறுத்தது.

அத்துடன், தற்போது இராணுவத்தால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள அரச தலைவர் ஆங் சான் சூகி இராணுவத்தின் இனப்படுகொலைகளை மறுத்து இராணுவத்தை நியாயப்படுத்தியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (நி-4)

## ஃபைசர் கொரோனா தடுப்பூசிக்கு நியூசிலாந்து அனுமதி

(வெலிங்டன்)

ஃபைசர் நிறுவனத்தின் கொரோனாத் தடுப்பூசி பயன்பாட்டுக்கு நியூசிலாந்து அரசாங்கம் தற்காலிகமாக ஒப்புதல் வழங்கியுள்ளது.

இதன் காரணமாக தடுப்பூசிகள் முதல் காலாண்டின் இறுதிக்குள் நியூசிலாந்திற்கு வந்தடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அமெரிக்கா, சீனா, இந்தியா உள்ளிட்ட பல நாடுகளில் தடுப்பூசி செலுத்தும் பணிகள் நடைபெற்று வரும் நிலையில், நியூசிலாந்தில் 50 இலட்சம் பேருக்கு தடுப்பூசி போட வேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (நி-4)

## மியன்மாரில் பேஸ்புக்கிற்கு தற்காலிக தடை விதிப்பு

(மியன்மார்)

மியன்மாரில் இணையத்தளத் சேவைகளுக்கு தற்காலிக தடை விதிக்க உத்தரவிடப்பட்டுள்ளது.


இதன்படி, மியன்மாரில் அரசுக்கு சொந்தமான தொலைத்தொடர்பு எம்.பி.டி. உட்பட இணையத்தள சேவை வழங்குநர்களால், பேஸ்புக் சேவைகள் தடை செய்யப்பட்டுள்ளன.

இது தொடர்பாக கருத்து தெரிவித்துள்ள அந்நாட்டு தகவல் தொடர்பு அமைச்சகம்,

நாட்டின் "ஸ்திரத்தன்மை" பேணுவதற்காக பெப்ரவரி 7 ஆம் திகதி வரை பேஸ்புக் தடை செய்யப்படும் என்று தெரிவித்திருந்தது.

மேலும், நாட்டின் ஸ்திரத்தன்மைக்கு பாதிப்பை ஏற்படுத்தும் மக்கள், போலிச் செய்திகள் மற்றும் தவறான தகவல்களை பரப்புகிறார்கள் என்றும், பேஸ்புக்கைப் பயன்படுத்துவதன் மூலம் மக்கள் மத்தியில் தவறான புரிதலை ஏற்படுத்துவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-4)

## குடியேற்றக் கொள்கைகளில் மாற்றம் அரசாணைகளில் கையெழுத்திட்டார் பிடன்



(வோஷிங்டன்)

அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பினால், அமுல்படுத்தப்பட்டிருந்த மிகக் கடுமையான குடியேற்றக் கொள்கைகளை மாற்றியமைப்பதற்கான மூன்று அரசாணைகளில் தற்போதைய ஜனாதிபதி ஜோ பிடன் கையெழுத்திட்டுள்ளார்.

மெக்ஸிக்கோ எல்லை வழியாக அமெரிக்காவுக்குள் உரிய ஆவணங்கள் இன்றி நுழைந்தவர்களையும் அவர்களது குழந்தைகளையும் தனித்தனியாகப் பிரித்து தடுப்பு முகாம்களில் தங்கவைக்கும் சர்ச்சைக்குரிய உத்தரவை ட்ரம்ப் பிறப்பித்திருந்தார். இதன் மூலம், 5,500 குடும்பங்கள் பிரிக்கப்பட்டன. அந்தக் குடும்பங்களைச் சேர்ந்த 600 குழந்தைகள் தற்போது எங்கு உள்ளன என்பது தெரியவில்லை.

இந்த நிலையில் ஜனாதிபதி ஜோ பிடன் பிறப்பித்துள்ள முதல் அரசாணையில், ட்ரம்ப் கொள்கையால் பிரிக்கப்பட்ட குடும்பங்களை மீண்டும் ஒன்று சேர்ப்பதற்கான குழுவை அமைப்பதற்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

இரண்டாவது அரசாணையில், அமெரிக்காவில் அடைக்கலம் தேடி அகதிகள் வருவதற்கான மூல காரணங்களை ஆராயவும் அகதிகளை மனிதத் தன்மையுடன் நடத்துவதற்கான வழிமுறைகளைக் கண்டறிவதற்குமான குழுவை அமைப்பதற்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

அகதிகளுக்கு அடைக்கலம் அளிப்பதற்கு நியாயமான, செயற்றிறன் மிக்க முறையில் குடியேற்ற விதிகளை சட்ட அமுலாக்க அமைப்புகள் செயற்படுத்துவதை உறுதி செய்வதற்கான உத்தரவு மூன்றாவது அரசாணையில் இடம்பெற்றுள்ளது.

இது குறித்து ஜோ பிடன் கூறுகையில், 'குடியேற்றம் தொடர்பான அரசாணைகளைப் பிறப்பிப்பதன் மூலம், புதிய சட்டங்களை நான் பிறப்பிக்கவில்லை. முந்தைய ஆட்சியில் அமுல்படுத்தப்பட்டிருந்த மோசமான கொள்கைகளை நீக்குவதற்காக மட்டுமே அந்த அரசாணைகளில் கையெழுத்திட்டுள்ளேன்.

நியாயமான, முறைப்படியான, மனிதாபிமானத்துடன் கூடிய சட்டபூர்வ குடியேற்றங்களுக்கு வழிவகை செய்வதன் மூலம், அமெரிக்கா முன்பை விட அதிக பாதுகாப்பாகவும் பலம் வாய்ந்ததாகவும் ஆக்குவதற்காக இந்த புதிய அரசாணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன' என தெரிவித்தார். (நி-4)

## உலகெங்கும் கொரோனா வைரஸின் 4 ஆயிரம் வகையான பிறழ்வுகள்

(லண்டன்)

உலகெங்கும் கொரோனா வைரஸின் 4,000 வகையான பிறழ்வுகள் உள்ளன. இவ்வாறான நிலையில்தான் பைசர் மற்றும் அஸ்ட்ராஜெனெகா உள்ளிட்ட அனைத்து தடுப்பூசி உற்பத்தியாளர்கள் தங்கள் தடுப்பூசிகளை மேம்படுத்த முயற்சிக்கின்றன என இங்கிலாந்தின் கொரோனா தடுப்பூசி வழங்கும் திட்டத்தை கண்காணித்து வரும் அமைச்சர் நாதிம் ஜஹாவி தெரிவித்துள்ளார்.

தொற்று நோயை ஏற்படுத்தும் கொரோனா வைரஸின் ஆயிரக்கணக்கான பிறழ்வுகள் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன.

எனினும் புதிய பிறழ்வுகளால் தடுப்பூசிகள் செயலற்றுப் போகும் நிலை வெகு குறைவாகவே உள்ளதாகவும் அமைச்சர் நாதிம் ஜஹாவி கூறினார்.

பைசர், பயோஎன்டெக், மொடர்னா, ஒக்ஸ்போர்ட்-அஸ்ட்ராஜெனெகா மற்றும் பிற தடுப்பூசி நிறுவனங்கள் புதிய பிறழ்வுகளை அவதானித்து அதற்கேற்ப தங்கள் தடுப்பூசிகளை மேம்படுத்த முயன்று வருவதாகவும் அவர் குறிப்பிட்டார். (நி-4)

# தீவிரவாதத்திலிருந்து நாட்டை மீட்டதால்

# உலகின் அவமானத்திற்கு ஆளானது இராணுவம்

## கவலையின் உச்சத்தில் கமால் குணரட்ன


**(கொழும்பு)**

**தாய் நாட்டை தீவிரவாதத்திலிருந்து மீட்டெடுத்ததால் இலங்கை இராணுவத்தைப் போன்று துன்புறுத்தல்களுக்கும் அவமானங்களுக்கும் உள்ளான இராணுவம் உலகில் எங்குமில்லை என பாதுகாப்பு செயலாளர் ஓய்வு பெற்ற ஜெனரல் கமால் குணரத்ன தெரிவித்தார்.**

ஓய்வுபெற்ற முப்படை அதிகாரிகளுக்கு சீருடை சட்டதிட்டங்களை அறிமுகப்படுத்தும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

கொழும்பு பாதுகாப்பு கல்லூரியில் இந்நிகழ்வு இடம் பெற்றது. முப்படை தளபதிகள் உள்ளிட்ட இராணுவ அதிகாரிகள் பலர் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

ஒரு கொடியின் கீழ் ஒரே சட்டத்தின் கீழ் சுதந்திரமாக வாழக்கூடிய வாய்ப்பை படை வீரர்களே உருவாக்கிக் கொடுத்தனர்.



"ஆட்சிக்கு வந்த ஒவ்வொரு அரசாங்கமும் அமைதிப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கும் போதும் அரசின் கட்டளைக்கு இணங்க துப்பாக்கிகளை நிலம் நோக்கி தாழ்த்தி அமைதியாக இருக்க வேண்டிய நிலை எங்களுக்கே ஏற்பட்டது.

அமைதிப் பேச்சுவார்த்தைகள் தோல்வியடைந்த ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் விடுதலைப்புலிகள் அமைப்பு மேற்கொண்ட ஒவ்வொரு கொடூர தாக்குதலுக்கும் முகம் கொடுத்து, மீண்டும் யுத்தத்திற்கு தயாராக வேண்டிய நிலைமையும் எமக்கே ஏற்பட்டது.

இராணுவம் என்பது மனித படுகொலை செய்வதற்கான ஒரு அமைப்பல்ல. நாட்டு மக்களின் தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்தி பொதுமக்கள் சுதந்திரமாக வாழக்கூடிய சூழலை உருவாக்குவதே இராணுவத்தின் கடமையென்பது எமது இதயத்திலுள்ள நிலைப்பாடாகும்." எனத் தெரிவித்தார். (நி-4)

---

# சுதந்திர தினம் ஒரு சமூகத்திற்கானது என எண்ணத் தோன்றுகிறது

## றிசாத் கவலை

(கொழும்பு)

இலங்கைக்கு கிடைத்த சுதந்திரத்தின் உண்மையான அர்த்தங்களை சகல சமூகங்களும் அனுபவிக்காத ஒரு சூழ் நிலையில், சிறுபான்மைச் சமூகங்கள் சுதந்திரதின கொண்டாட்டங்களை மாற்றான்தாய் மனப்பான்மையுடனே பார்ப் பதாக அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும்பாராளுமன்ற உறுப்பினருமான றிசாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

நமது நாட்டின் சுதந்திர தினம் குறித்து, அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது,

"நமது நாட்டுப் பிரஜைகள் ஒவ்வொருவரும் அரசியல், மதம், சமூக, பொருளாதார, வாழ்வியல் உரிமைகளை சுதந்திரமாக அனுபவிக்கவே வெளிநாட்டுச் சக்திகளிடமிருந்து நாட்டை மீட்கப் போராடினர். இந்தப் போராட்டத்தில் பௌத்த, இந்து, கத்தோலிக்க மற்றும் இஸ்லாமிய மதத் தலைவர்கள் மற்றும் சகல சமூகங்களையும் சார்ந்த அரசியல் தலைவர்கள் உள்ளடங்கலாக பொதுமக்களும், நாட்டின் சுதந்திரத்துக்காக அர்ப்பணிப்புடன் உழைத்ததுதான் வரலாறு.

இத்தினம், குறித்த ஒரு சமூக, மதத்துக்கான சுதந்திரம் தானோ? என எண்ணுமளவுக்கு ஓரங்கட்டப்படும் நிலைதான் சிறுபான்மை சமூகத்தினருக்கும் ஏற்பட்டுள்ளது. நாட்டுப்பற்றில் சிறுபான்மை சமூகங்களுக்கு உள்ள அளவு கடந்த ஆர்வத்தை உதாசீனம் செய்வதாகத்தான், இந்த அரசாங்கத்தின் செயற்பாடுகள் எமக்குத் தெரிகின்றன. இது தமிழ் மொழியில் தேசிய கீதம் மறுக்கப்படுவதிலிருந்து ஊர்ஜிதமாகின்றது என றிசாத் தெரிவித்தார். (நி-4)

---

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2224


**டினுசாந்**



மாப்பிள தம்பி நல்ல சந்தர்ப்பம் தாலிய கீழே போட்டுட்டு தப்பிச்சு ஓடிடு...


**தாரணி**

டக்குனு பார்த்ததும் ஆப்பாயில் னு நெனச்சிட்டேன...



பூனை மேல ஆரஞ்சு பழத்த யாரோ வைச்சிருக்கானுங்க.

**துர்க்கா**



என்னாங்க, உங்க பிறந்தநாளுக்கு ஒரு சூப்பர் ரெஸ் எடுத்திருக்கேன்...

சூப்பர், எங்கே எடுத்திட்டு வா நில்லுங்க, போட்டுட்டே வரேன்

**நிருத்திகா**

என்னடா உதட்டெல்லாம் காயம்?

ஒண்ணுமில்லடா Wife ஊருக்கு போறா ரெயில் ஏத்திவிட்டு வந்தேன்



அதுக்கு.... சந்தோஷத்துல எஞ்சினுக்கு முத்தம் கொடுத்தேன அதான்.

**நிசாந்தன்**

அம்மா: ஆராரே ஆரிரரோ என் செல்ல குட்டி கண்ணுறங்கு, ஆராரோ ஆராரோ ஆரிரரோ



குழந்தை: பேசாம தூங்க விடுறியா இல்ல எந்திரிச்சு போகவா

**சுபராஜ்**



முடியல்ல.. இந்த கணக்கு வாத்தியாரை புரிஞ்சிக்கவே முடியல்லையே நேற்று 5+5=10 இன்னு சொன்னாரு.. இன்னைக்கு 7+3 =10 இன்னு சொல்லுறாரு எதை நான் நம்புறது...

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# நாம் பெற்ற சுதந்திரத்தை அர்த்தமுள்ளதாக மாற்றுவோம்

## பிரதமர் மகிந்த ராஜபக்ஷ

(கொழும்பு)

எதிரிப் படைகளைத் தோற்கடிப்பது போன்றே, கொரோனா - 19 தொற்றை தோற்கடிப்பதற்கும் இலங்கை தேசமாக எழுந்து நிற்பதாக பிரதமர் மகிந்த ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார்.



சுதந்திர தினத்தை முன்னிட்டு நேற்று வியாழக்கிழமை வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

நாம் பெற்ற சுதந்திரத்தை அர்த்தமுள்ளதாக்கிக் கொள்ளும் செயல்முறையே இன்று தாய் நாட்டிற்கான தேவையாக உள்ளது.

நாடுகளிடையே ஒற்றுமையை வளர்த்தல் மற்றும் மத நல்லிணக்கம் என்பன இதற்கு வலுவான ஆதரவாக அமைந்துள்ளதாக குறிப்பிட்டுள்ள பிரதமர், பல்வேறு சவால்களுக்கு மத்தியில் உள்ளூர் உற்பத்திக்கு மதிப்பளிக்கும் பொருளாதார கொள்கை ஊடாக அபிவிருத்தியை நோக்கி நகரும் பாதையில் நுழைந்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

ஒவ்வொரு துறையிலும் முன்னெடுக்கப்பட வேண்டிய சீர்திருத்தங்களைப் புரிந்துகொண்டு, மக்களிடம் முன்வைக்கப்பட்ட சுபீட்சத்தின் நோக்கு கொள்கைத் திட்டத்தின் ஊடாக சுதந்திரம் மேலும் அர்த்தமுள்ளதாகும்போது வளமான எதிர்காலம் - சுபீட்சமான தாய்நாடு என்பது யதார்த்தமாகும்

எதிரிப் படைகளைத் தோற்கடிப்பது போன்றே, கொரோனா - 19 தொற்றை தோற்கடிப்பதற்கும் இலங்கை தேசமாக எழுந்து நிற்பதாக பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தமது சுதந்திர தின செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

தாய்நாட்டின் பிராந்திய ஒருமைப்பாடு மற்றும் இறையாண்மைக்காக தங்கள் உயிரைத் தியாகம் செய்த மற்றும் மகத்தான தியாகங்களைச் செய்த அனைவருக்கும் மற்றும் அந்த சவால்களுக்கு மத்தியில் அர்ப்பணிப்புடன் செயற்படும் அனைவருக்கும் மரியாதை செலுத்துவதாகவும் பிரதமர் தெரிவித்தார். (நி-4)

# ஒன்றிணைந்து செயலாற்றத் தயார்

## சுதந்திர தின வாழ்த்துச் செய்தியில் பிடன்

(கொழும்பு)

73 ஆவது தேசிய சுதந்திர தினத்தை முன்னிட்டு ஐக்கிய அமெரிக்க இராச்சியத்தின் ஜனாதிபதி ஜோ பிடன் வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

இந்து-பசுபிக் பிராந்திய பாதுகாப்பு மற்றும் செழிப்பை மேம்படுத்துவது தொடர்பில் இலங்கையுடன் ஒன்றிணைந்து ஒரு பங்காளராகவும் நண்பராகவும் பணியாற்ற எதிர்பார்ப்பதாக ஐக்கிய அமெரிக்கா வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கொரோனா தொற்றை தோற்கடிக்கவும் உலகப் பொருளாதார நிலையை வழமைக்குக் கொண்டு வருவதற்கும் எதிர்கால சவால்களை எதிர்கொள்ள அயராது ஒத்துழைப்பை வழங்குவதாகவும் அமெரிக்கா வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளது. (நி-4)

# சுதந்திர தினத்தை சிறப்பித்த கூகுள்




(கொழும்பு)

இலங்கையின் 73 ஆவது சுதந்திர தினத்தை சிறப்பிக்கும் விதமாக கூகுள் நிறுவனம் டூடுல் ஒன்றை வெளியிட்டுள்ளது.

இலங்கையின் சுதந்திர தினம் பெப்ரவரி 4 ஆம் திகதி ஒவ்வொரு ஆண்டும் கொண்டாடப்படுகிறது.

இந்த நாளில் நாடு முழுவதும் தேசியக்கொடி ஏற்றப்பட்டு மரியாதை செலுத்தப்படும்.

அந்த வகையில் விடுமுறை தினங்கள், உலக நிகழ்வுகள், சாதனை செய்த மனிதர்களைக் கொண்டாடும் விதமாகக் கூகுள் தனது முகப்பு பக்கத்தில் கூகுள் டூடுலில் வடிவமைக்கப்பட்டு சிறப்பித்து வருகிறது.

இந்நிலையில், அந்த வரிசையில் கூகுள் டூடுலில் இலங்கையின் தேசியக்கொடி இடம் பெற்று கௌரவமளிக்கப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## பித்து!

புதிதாக கல்யாணம் ஆன ஒருத்தன் அலுவலகம் முடிந்து வீட்டுக்கு வந்தான். ஜான் ஜான் என்று கூப்பிட்டான். உடனே அவனுடைய மனைவி ஓடிவந்து கதவைத் திறந்தாள். எப்படி இருக்கின்றாய் ஜான்? என்று கேட்டுக் கொண்டே உள்ளே போனான்.

இந்த இடத்தில் நமக்கு ஒரு சந்தேகம் வரலாம். இவன் ஜான் ஜான் என்று கூப்பிடுகின்றான். அவன் மனைவி வந்து கதவைத் திறக்கிறாளே என்றான். ஜான் என்பது யாரு. அது ஆணின் பெயர் மாதிரி இருக்கே? என்கின்ற சந்தேகம் உண்மைதான்.

அவன் மனைவி பெயரைச் சுருக்கி செல்லமாக அப்படிக் கூப்பிடுகின்றான். அது வந்து வேறு ஒன்றுமில்லை. மனைவி பெயர் ஜானகி. அதைச் சுருக்கி ஜான் என்று கூப்பிடுகின்றான். 'கி' யை விட்டுவிட்டான்.

இதை வாரியார் சுவாமிகள் ஒரு சொற்பொழிவிலே சொன்னார். அவர் சொன்னார்... இவன் ஜானகியிலேயிருந்த 'கி' யை மட்டுமா விட்டான். வீட்டுக் கீயையே இப்பொழுது அவளிடம் தான் விட்டு வைத்திருக்கின்றான் என்றார். அதாவது வீட்டுச் சாவியே இப்பொழுது அவளிடம் தானாம்.

வந்தவன் அவள் முகத்தைக் கவனித்திருக்கின்றான். அவள் கண் கலங்கியிருந்தது. தேம்பித் தேம்பி அழுகின்றது போல இருந்தது. உடனே இவன் பதறிப் போனான்.

ஏன் என்ன ஆகிவிட்டது. ஏன் இப்படி அழுகின்றாய்? என்றான்.

அதற்கு அவன் மனைவி சொன்னாள்... உங்கள் அம்மா என்னை உற்று உற்றுப் பார்க்கின்றார் என்றாள். உடனே இந்த மகன் கொல்லைப் பக்கம் ஓடினான். அம்மாவைப் பார்த்தான்.

ஏம்மா ஜானை உற்று உற்றுப் பார்க்கின்றாய்? என்று கேட்டான். நான் ஒன்றும் தவறாகப் பார்க்கவில்லையேப்பா. உன்னுடைய மனைவி அல்லவா அதனாலே ஆசையாகப் பார்த்திருப்பேன் என்றார் அவர். இவன் மனைவி முகத்தைப் பார்த்தான். மறுபடியும் அம்மா பக்கம் திரும்பினான்.

இருந்தாலும் ஏன் அவளைப் பார்த்தாய் என்று கேட்டான்.

பெற்ற தாயையே அடிக்க ஆரம்பித்து விட்டான்.

இதற்குள்ளே அந்த மருமகள் ஓடி வந்து ஐயோ அத்தையை அடிக்காதீர்கள் என்று சொல்லிக் கொண்டே அத்தையுடைய இரண்டு கையையும் சேர்த்துக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டாள்.

இப்பொழுது அவனுக்கு இன்னமும் வசதியாகப் போய்விட்டது. மகனிடம் அடிவாங்கிய அந்த அம்மா மாலை கோயிலுக்குப் போனார். கடவுளிடம் வேண்டிக் கொண்டார். கடவுளே... அவன் என் பிள்ளை. அவனுடைய மனைவியும் எனக்கு இன்னொரு பிள்ளை மாதிரித்தான். அவர்கள் ஏதோ தெரியாமல் நடந்து கொள்கிறார்கள்.

அதை நீ பெரிதாக எடுத்துக் கொண்டு அவர்களுக்கு ஏதும் குறை வைத்துவிடக் கூடாது என்று அந்த அம்மா ஆண்டவனிடம் மனம் உருகி வேண்டிக் கொண்டாராம். இதைத்தான் பெற்றமனம் பித்து என்று சொல்கிறது என்கின்றார் திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள்.

இங்கே பித்து என்று சொல்வது பைத்தியம் என்கின்ற அர்த்தத்திலே இல்லை. பித்து என்பது மெய்யன்பு.

தனக்கு செய்கின்ற துன்பத்தை மறந்து பிள்ளைகள் மேல் ஒரு தாய் வைக்கின்ற மெய்யன்பு இருக்கு பாருங்க அதுதான் பித்து என்கின்றார் அவர். பித்துப் பிடித்து அலைவது என்பது வேறு. பைத்தியம் பிடித்து அலைவது என்பது வேறு.

ஒரு பைத்தியக்கார வைத்தியசாலையிலேயிருந்து அவசரமாக ஒருத்தர் வெளியில் ஓடிவந்தார். சட்டையெல்லாம் கிழிந்து தொங்கிக் கொண்டிருக்கு. வெளியிலே எதிரிலே வந்த ஒருத்தர் அவரை மடக்கிப் பிடித்தார். எங்கே ஓடுகின்றீர்கள். வாங்க உள்ளே டாக்டரைப் பார்க்கலாம் என்றார்.

அவர் மெதுவாகச் சொன்னார்... நான் தான் டாக்டர். புதிதாக வந்த ஒருத்தன் என்னை இப்படி செய்து விட்டான். பின்னால் அவன் என்னைத் துரத்திக் கொண்டு வருகின்றான். நீங்கள் முதலிலே போய் அவனைப் பிடியுங்கள். நான் பின்னாலே வருகின்றேன் என்றார்.

# உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்கள் தெரிவு முறையும் தேர்தல் நடைமுறைகளும் (2017 வரை)

17



கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.

உள்ளூராட்சிச் சபைகள் தேர்தல் -2002 அட்டவணை-8

| மாவட்டம் | A | B | C | மாவட்டம் | A | B | C |
|---|---|---|---|---|---|---|---|
| கொழும்பு | 4 | 3 | 5 | மன்னார் | - | - | - |
| கம்பஹா | 2 | 5 | 12 | மட்டக்களப்பு | - | - | - |
| களுத்துறை | - | 4 | 10 | அம்பாறை | - | 1 | 7 |
| கண்டி | 1 | 4 | 17 | திருகோணமலை | - | - | - |
| மாத்தளை | 1 | - | 11 | அநுராதபுரம் | 1 | - | 18 |
| நுவரெலியா | 1 | 2 | 5 | பொலநறுவை | - | - | 6 |
| காலி | 1 | 2 | 15 | குருநாகல் | 1 | 1 | 18 |
| மாத்தறை | 1 | 1 | 11 | புத்தளம் | - | 2 | 10 |
| அம்பாந்தோட்டை | - | 2 | 9 | பதுளை | 1 | 2 | 14 |
| யாழ்ப்பாணம் | - | - | - | மொனராகலை | - | - | 10 |
| கிளிநொச்சி | - | - | - | இரத்தினபுரி | 1 | 1 | 13 |
| வவுனியா | - | - | - | கேகாலை | - | 1 | 10 |
| முல்லைத்தீவு | - | - | - | மொத்தம் | 15 | 31 | 201 |
| தேர்தல்கள் நடைபெற்ற சபைகள்- 247 | | | | | | | |
| A- மாநகர சபை,B-நகர சபை,C- பிரதேச சபை | | | | | | | |

வேட்புமனுக்கால இறுதியில் கிளிநொச்சி மாவட்டத்தின் 3 பிரதேச சபைகள், முல்லைத்தீவு மாவட்டத்தின் 4 பிரதேச சபைகள் என்பன சார்பாக முதல் வேட்புமனுக்காலத்திற்குள் எத்தகைய வேட்புமனுவும் தாக்கல் செய்யப்படவில்லை. உள்ளூராட்சி அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின்கீழ் இரண்டாம் வேட்புமனுக்காலம் பிரகடனப்படுத்தப்பட்ட போதிலும் கிளிநொச்சி, முல் லைத்தீவு மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு குறித்த உள்ளூராட்சிச் சபைகள் தொடர்பாக வேட்பு மனுக்கள் கிடைக்கவில்லை.இவ்விடயம் உள்ளூராட்சி அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் உள்ளூராட்சி அமைச்சருக்கு 2002.03.11ஆம் திகதி அறிவிக்கப்பட்டது.

222 உள்ளூராட்சிச் சபைகள் சார்பாக 7764 வாக்கெடுப்பு நிலையங்களில் இவ் வாக்கெடுப்பு 2002 மார்ச் மாதம் 20ஆம் திகதி நடைபெற்றது. 08 உள்ளூராட்சிச் சபைகள் சார்பாக 36 வாக்கெடுப்பு நிலையங்களில் வாக்கெடுப்புக்கள் 2002 மார்ச் மாதம் 25ஆம் திகதி நடைபெற்றது.

நீதிமன்றத்தில் தொடக்கப்பட்ட வழக்குகள் காரணமாக ஒத்திவைக்கப்பட்ட 17 உள்ளூராட்சிச் சபைகள் தொடர்பான வாக்கெடுப்புக்கள் 772 வாக்கெடுப்பு நிலையங்களில் இவ் வாக்கெடுப்பு 2002 மே மாதம் 20ஆம் திகதி நடைபெற்றது. இவ்வாறு தேர்தல்கள் நடத்தப்பட்ட உள்ளூராட்சிச் சபைகளின் விபரம் அட்டவணை-8இல் தரப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 38(3) ஆம் பிரிவின் கீழ் 2002.03.22 ஆம் திகதிய 1228/13 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தல் ஒன்றின் மூலம் வாக்கெடுப்புக்களை நடத்துவதற்கு பொருத்தமான சூழ்நிலையொன்று காணப்படாத காரணத்தினால் யாழ்ப்பாண மாவட்டத்தில் 16 உள்ளூராட்சிச் சபைகளுக்கும் வவுனியா மாவட்டத்தில் 05 உள்ளூராட்சிச் சபைகளுக்கும் மன்னார் மாவட்டத்தில் 04 உள்ளூராட்சிச் சபைகளுக்கும் மட்டக்களப்பு மாவட்டத்தில் 10 உள்ளூராட்சிச் சபைகளுக்கும் திருகோணமலை மாவட்டத்தில் 11 உள்ளூராட்சிச் சபைகளுக்கும் அம்பாறை மாவட்டத்தில் 07 உள்ளூராட்சிச் சபைகளுக்குமான (மொத்தம் 53 உள்ளூராட்சிச் சபைகள்) வாக்கெடுப்புக்கள் பிற்போடப்பட்டன. அதன்பின்னர் உள்ளூராட்சி அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 38(3) ஆம் பிரிவின் கீழ் 2003 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 25 ஆம் திகதி வரை 1254/10 ஆம் இலக்க 2002.09.18 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தல் ஒன்றின் மூலம் ஒத்திவைக்கப்பட்டது.

அதாவது தேர்தல்கள் நடைபெற்ற உள்ளூராட்சிசபைகள் 247, போட்டியின்றி உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்ட உள்ளூராட்சிசபைகள் 03, வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்படாத உள்ளூராட்சிசபைகள் 07,தேர்தல்கள் ஒத்திவைக்கப்பட்ட உள்ளூராட்சிசபைகள் 53, தேர்தல் நடத்துவதற்கு நீதிமன்றத்தால் தீர்ப்பு வழங்கப்படாத உள்ளூராட்சி சபை (அக்குரஸ்ஸ) 01. மொத்தமாக 311 உள்ளூராட்சிசபைகள்.

2002.09.18 ஆம் திகதிய 1254/10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தல் ஒன்றின் மூலம் ஒத்திவைக்கப்பட்ட யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை மற்றும் அம்பாறை மாவட்டங்களின் உள்ளூராட்சிச் சபைகள் 53 இற்குமான வாக்கெடுப்புத் தினமாக விதிக்கப்பட்டிருந்த 2003.06.25 ஆம் திகதி, 2003.06.20 ஆம் திகதிய 1293/25 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தல் ஒன்றின் மூலம் 2004.01.24 ஆம் திகதியாக திருத்தியமைக்கப்பட்டது. அவ் வாக்கெடுப்புகள் கடைசியாக 2006.02.25ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டது.

### அக்குரஸ்ஸ பிரதேச சபைத் தேர்தல்

1223/16 ஆம் இலக்க 2002.12.21 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அக்குரஸ்ஸ பிரதேச சபைக்கான வாக்கெடுப்புத் திகதி (2002.03.20) 2003.01.31 ஆம் திகதிய 1273/31 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் உள்ளூராட்சி அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 38(3) ஆம் பிரிவிற்கமைய பிரசுரிக்கப்பட்ட அறிவித்தல் மூலம் 2003.03.08 ஆம் திகதியென திருத்தியமைக்கப்பட்டது. அதன்பின் அக்குரஸ்ஸ பிரதேச சபைத்தேர்தல் 2003.03.08 ஆந் திகதி நடைபெற்றது.

### தேர்தல்கள் ஒத்திவைக்கப்பட்ட 53 உள்ளூராட்சி சபைகள்

2003.03.20 ஆம் திகதிய 1293/25 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தல் மூலம் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அமைந்துள்ள 53 உள்ளூராட்சி சபைகளுக்கான வாக்கெடுப்புகள் 2004.01.24 ஆம் திகதி நடத்த தீர்மானிக்கப்பட்டிருந்தது.

அவற்றில் அம்பாறை நிர்வாக மாவட்டத்தில் அமைந்துள்ள 7 உள்ளூராட்சி சபைகளுக்கான (கல்முனை மாநகர சபை மற்றும் 6 பிரதேச சபைகள்) வாக்கெடுப்புக்கள் 2004.02.21 ஆம் திகதிக்கும் ஏனைய உள்ளூராட்சி சபைகளுக்கான வாக்கெடுப்புக்கள் 2004.10.23 ஆம் திகதிக்கும் 1324/4 ஆம் இலக்க 2004.01.19 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தல் மூலம் ஒத்திவைக்கப்பட்டன.

அது மீண்டும் (53 உள்ளூராட்சி சபைகளுக்கான வாக்கெடுப்புக்கள்) 1359/32 ஆம் இலக்க 2004.09.24 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தல் மூலம் 2005.04.23 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டன. இத்தேர்தல் திகதி 1387/10 ஆம் இலக்க 2005.04.07 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தல் மூலம் 2006.02.25 ஆம் திகதிக்கு பிற்போடப்பட்டன.

### உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தல்- 2006

2002, 2003 ஆம் ஆண்டுகளில் வாக்கெடுப்புக்கள் நடத்தப்பட்ட உள்ளூராட்சிச் சபைகளின் பதவிக்காலம் 2006, 2007ஆம் ஆண்டுகளில் முடிவடையவிருந்தன. உள்ளூராட்சிச் சபைகளுக்கு இறுதியாக தேர்தல்கள் நடத்தப்பட்டதற்குப் பின்னர் புதிதாக பல உள்ளூராட்சிச் சபைகள் (அட்டவணை-9 ஐப் பார்க்க) உருவாக்கப்பட்டன. அதன்படி உள்ளூராட்சிச் சபைகளின் மொத்த எண்ணிக்கை 330 ஆகும். அதில் 18 மாநகர சபைகள், 42 நகர சபைகள் மற்றும் 270 பிரதேச சபைகள் அடங்கும்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வாக்கெடுப்புக்கள் நடத்தப்படாத உள்ளூராட்சிச் சபைகள் 53 இற்குமான வேட்புமனுக்களை வறிதாக்கவும், நாடெங்கிலுமுள்ள அனைத்து உள்ளூராட்சிச் சபைகள் சார்பாகவும் ஒரே தினத்தில் வாக்கெடுப்புக்களை நடத்தத்தக்கவாறு அப்போது நடைமுறையிலிருந்த உள்ளூராட்சிச் சபைகளின் பதவிக்காலத்தை முடிவுக்குக் கொண்டுவர உள்ளூராட்சிச் சபைகளுக்கு பொறுப்பான அமைச்சருக்கு அதிகாரம் வழங்குவதற்குமான உரிய சட்ட ஏற்பாடுகளை உள்ளடக்கிய 2006 ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க உள்ளூராட்சி அதிகார சபைகள் சிறப்பேற்பாடுகள் சட்டம் 2006.01.19 ஆம் திகதி சட்டமாக்கப்பட்டது.

இதற்கிணங்க அனைத்து உள்ளூராட்சி அதிகார சபைகளினதும் பதவிக்காலம் 2006.04.15 ஆம் திகதியுடன் முடிவடைவதாக உள்ளூராட்சிச் சபைகளுக்கு பொறுப்பான அமைச்சரினால் உரிய அறிவித்தல் 2006.04.12 ஆம் திகதிய 1440/28 ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டது.

(தொடரும்...)

# இறையாண்மை கொண்ட நாட்டில் ஒரு கொடியின் நிழலில் வாழவேண்டும்

## வாழ்த்துச் செய்தியில் சஜித்



(கொழும்பு)


தேசத்தின் உண்மையான சுதந்திரத்திற்காக முன்வருவோம் என்று எதிர்க்கட்சி தலைவர் சஜித்பிரேமதாஸ தெரிவித்தார்.

சுதந்திர தினத்தை முன்னிட்டு அவர் நேற்று வியாழக்கிழமை வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியிலேயே இதனைத் தெரிவித்துள்ளார்

தமது தாய்நாட்டின் சுதந்திரத்திற்காக இனம், மதம், கட்சி, நிறம் ஆகியவற்றைப் பொருட்படுத்தாமல் ஒரே தாயின் பிள்ளைகளாக பணியாற்றிய வரலாறு மிகவும் உணர்வுபூர்வமானது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இறையாண்மை கொண்ட நாட்டில் ஒரு கொடியின் நிழலில் வாழ வேண்டும் என்ற தூய்மையான நம்பிக்கை அவர்களுக்கு இருந்ததாகவும் அவர் தெரிவித்ததுடன் அதற்காக தங்கள் உயிரைத் தியாகம் செய்தவர்களையும் இரத்தம், வியர்வை, கண்ணீர் சிந்திய வீரர்களையும் நினைவில் கொள்வோம் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (நி-4)

# ஆலய வழிபாடு ஏன்–எதற்கு – எப்படி



## மந்திரங்களின் மகிமை

ஆலய வழிபாட்டில் மிக மிக முக்கியத்துவம் வாய்ந்தது மந்திரங்கள். ஒவ்வொரு கடவுளுக்கும் ஒவ்வொரு வகையான மந்திரங்கள் உள்ளன.

இந்த மந்திரங்களைத் தெரிந்து கொண்டு உரிய முறையில் உச்சரித்து வழிபாடு செய்யும் போது கடவுள் மனம் மகிழ்ந்து நமக்குத் தேவையானதைக் கொடுப்பார்.

அதை விடுத்து ஆலயத்துக்கு சும்மா வெறுமனே சென்று சாமி கும்பிட்டு விட்டு வருவதில் எந்தப் பிரயோசனமும் இல்லை. எனவே அவசியம் மந்திரங்களைத் தெரிந்து கொள்ளுங்கள்.

சரி...மந்திரம் என்றால் என்ன?
மனம் + திறம் = மந்திரம்.
மனதுக்கு திடம் கொடுப்பது தான் மந்திரம்.

சுவாமிகளின் மூல மந்திரத்தை மீண்டும் மீண்டும் சொல்லும் போது முதலில் நமது மனது திடப்படும். பிறகு அந்த மந்திர ஒலிகள் இடையூறுகளை விலக்கி இனிய பாதைக்கு உங்களை அழைத்துச் செல்லும்.

இந்த உண்மையை நம் முன்னோர்கள் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தெரிந்து கொண்டனர். சரியான மந்திரங்களை உச்சரித்து பலன் பெற்றனர்.

மந்திரங்களில் 7 கோடி உள்ளதாகக் கூறப்பட்டுள்ளது. இந்த மந்திரங்கள் சித்தர்களாலும் மகான்களாலும் இறைவனிடம் இருந்து வரங்களாகப் பெறப்பட்டவையாகும்.

மந்திரங்கள் பல வகைப்படும். பிரணவ மந்திரம், காயத்ரி மந்திரம், பீஜாட்சர மந்திரங்கள், அஷ்ட கர்ம மந்திரங்கள், வழிபாட்டு மந்திரங்கள் என்று சொல்லிக் கொண்டே போகலாம்.

சில மந்திரங்களை வீடுகளில் மட்டுமே உச்சரிக்க வேண்டும். சில மந்திரங்களை ஆலயங்களில் தான் சொல்ல வேண்டும். ஒவ்வொரு சந்நிதியிலும் உள்ள மூர்த்தத்துக்கு ஏற்ப மந்திரங்களைச் சொன்னால் நிச்சயம் பலன் தேடி வரும்.

சில மந்திரங்கள் காடு மற்றும் குகைக்குள் மட்டுமே ஜெபிக்க வேண்டும். சில மந்திரங்கள் திருமணம் ஆனவர்கள் மட்டுமே சொல்ல வேண்டும். ஆனால் ஆன்மிகத் தகுதி பெறாமல் மந்திரங்களைச் சொல்லக்கூடாது.

இறைவனிடம் மனதை சரண் அடையச் செய்த ஒவ்வொருவரும் மந்திரங்களை ஜெபிக்க வேண்டும். தினமும் ஏதாவது ஒரு மந்திரத்தை 108 தடவை சொல்வது மிகவும் நல்லது.

ஆலய பிரகாரங்களில் அமர்ந்து மந்திரங்களைச் சொல்லும் போது அது நிச்சயம் பல மடங்கு பலன்களை அள்ளித்தரும். மந்திரம் என்றதும் நிறையப் பேர் என்னவோ ஏதோ என நினைத்துப் பயந்து விடுகிறார்கள்.

சிலர் அது நமக்கு ஒத்து வராது என்று முயற்சி செய்யாமலே விட்டு விடுகிறார்கள். சிலர் எல்லா மந்திரங்களும் சமஸ்கிருதத்தில் தானே இருக்கிறது. அதை உச்சரிக்கத் தெரியாது என்று நினைப்பார்கள்.

இப்படியெல்லாம் நினைத்து மனதைப் போட்டுக் குழப்பிக்கொண்டு வீணாகக் கவலைப்பட வேண்டியதில்லை. ஏனெனில் மந்திரங்கள் மிக மிக எளிமையானவை. தமிழிலேயே ஏராளமான மந்திரங்கள், பதிகங்கள் பாடல்கள் உள்ளன.

ஓம் கணபதி நமஹ, ஓம் நமச்சிவாய, ஓம் நமோ நாராயணநம, ஓம் சாய் ஸ்ரீசாய் ஜெய ஜெயசாய், ஓம் சக்தி பராசக்தி, ஸ்ரீராம ஜெயராம ஜெய ஜெய ராமா என்றெல்லாம் சொல்வது மிக மிக எளிமையான மந்திரங்கள்.

இந்த மந்திரங்களை உச்சரிப்பது போல குல தெய்வத்தின் பெயரையும் மந்திரமாக உச்சரிக்கலாம். இந்த மூல மந்திர உச்சரிப்புக்கு இணையான மகிமை உலகில் வேறு எதுவும் இல்லை.

(தொடரும்)

# செய்தித்துளிகள்

## மணல் அகழ்விற்கு அனுமதிப்பத்திரம் வழங்க தீர்மானம்

(கொழும்பு)

களுகங்கை மணல் அகழ்விற்கு குறுகிய கால நிபந்தனைகளுக்குட்பட்ட அனுமதிப்பத்திரங்களை மீண்டும் பெற்றுக் கொடுப்பதற்கு சுற்றுச்சூழல் அமைச்சு தீர்மானித்துள்ளது.

சுற்றுச்சூழல் அமைச்சர் மகிந்த அமரவீரவின் தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்ற கலந்துரையாடலின்போதே இது குறித்து தீர்மானிக்கப்பட்டது.

கடல் நீர் ஆற்று நீருடன் கலப்பது நிரூபிக்கப்பட்டால் மணல் அகழ்வை மீண்டும் தடை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் அமைச்சரவை தெரிவித்துள்ளது. (நி-4)

## தப்பிச் சென்றோருக்கு இன்ரபோல் எச்சரிக்கை

(கொழும்பு)

பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புபட்டு வெளிநாடுகளுக்கு தப்பிச்சென்றுள்ள 129 சந்தேக நபர்களுக்கு சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

அவர்களுள் 40 பேரளவில் இந்நாட்டில் இடம்பெற்றுள்ள பல்வேறு நிதி மோசடிகள் தொடர்பில் தேடப்பட்டு வருபவர்கள் என அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் வேறு குற்றச்சாட்டுகள் தொட ர்பில் தேடப்பட்டு வரும் 87 பேருக்கு சர்வதே பொலிஸார் நீல எச்சரிக்கை விடுத்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (நி-4)

## 11 பேர் கைது

(கொழும்பு)

முகக் கவசம் அணியத் தவறிய மற்றும் கொவிட் சுகாதார வழிகாட்டல்களை பின்பற்றத் தவறிய குற்றச்சாட்டுக்காக நேற்றுக் காலை 6 மணியுடன் முடிவடைந்த கடந்த 24 மணி நேரப் பகுதிக்குள் 11 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். (நி-4)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா |
|---|---|---|---|
| கத்தரிக்காய் | 400 | 450 | 420 |
| உருளைக்கிழங்கு | 120 | 130 | 130 |
| பச்சைமிளகாய் | 800 | 750 | 800 |
| தக்காளி | 220 | 180 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 60 | 70 |
| கோவா | 100 | 100 | 100 |
| கரட் | 180 | 260 | 240 |
| பூசணி | 140 | 150 | 130 |
| புடோல் | 200 | 220 | 180 |
| வாழைக்காய் | 50 | 60 | 60 |
| சின்ன வெங்காயம் | 400 | 450 | 450 |
| பெரிய வெங்காயம் | 100 | 80 | 100 |
| பாகற்காய் | 250 | 300 | 250 |
| வெண்டிக்காய் | 240 | 250 | 180 |
| கருணைக் கிழங்கு | 100 | 120 | 120 |
| பயற்றங்காய் | 240 | 200 | 240 |
| லீக்ஸ் | 100 | 120 | 140 |
| பீற்றூட் | 260 | 240 | 140 |
| கறிமிளகாய் | 300 | 300 | 350 |
| முருங்கைக்காய் | -- | -- | -- |
| போஞ்சி | 160 | 200 | 180 |
| கத்தரிதம்புள்ள | 350 | 400 | -- |
| கீரை - 1 பிடி | 80 | 70 | 40 |
| தேசிக்காய் | 100 | 120 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 85 | 70 |
| இராசவள்ளி | 250 | 250 | 200 |
| வெங்காயப்பூ | 250 | 220 | 280 |
| முள்ளங்கி | 160 | 120 | 120 |
| பொன்னாங்காணி | 40 | 50 | 50 |
| வல்லாரை | 15 | 30 | 20 |
| ஈரப்பலா | 140 | 100 | 60 |



# சிறுவர் அரங்கம்

## வீண் பேச்சால் வந்த விபரீதம்



**தா**ன தருமங்களை செய்து வருவதில் அதிக சந்தோஷப்படுகிற மன்னன் ஒருவன் இருந்து வந்தான். யார் தேடி வந்தாலும் இல்லை என்று சொல்லாமல் அவர்களின் தேவை அறிந்து, தானம் செய்து வந்தான்.

குறிப்பாக அந்தணர்களுக்கு அன்னதானம் செய்வதில் பெரும் விருப்பமுடையவன். நாள் தவறாமல் தினந்தோறும் அதை மேற்கொள்பவன்.

ஒரு நாள், அவனைத் தேடி வந்த அந்தணரின் பசியாற, அவருக்கு அன்னதானம் செய்து கொண்டிருந்தான்.

அந்தணர் உணவருந்திக் கொண்டிருந்த இடத்துக்கு மேலே ஒரு கழுகு, ஒரு பாம்பைக் கொன்று தன் அலகில் பிடித்தவாறு பறந்து கொண்டிருந்தது.

மன்னன் உணவளிக்கும் பாத்திரத்தைக் கடந்த நேரத்தில் கழுகின் அலகிலிருந்த செத்த பாம்பின் வாயிலிருந்து ஒரு துளி கடுமையான விஷம் அந்தப் பாத்திரத்தில் இருந்த உணவுக்குள் விழுந்தது.

சரியாக அந்த விஷம் இருந்த உணவைப் பெற்று சாப்பிட்ட அந்தணன், அரண்மனையிலிருந்து வெளியேறியதும் இறந்து போனான். இறந்த அந்தணன் எமலோகத்தில் சித்திரகுப்தன் முன்பு கொண்டு செல்லப்பட்டான்.

சித்திரகுப்தனுக்கு அந்த அந்தணன் இறந்ததற்கான கர்மவினையை யார் மேல் சுமத்தி அதற்கான தண்டனையை வழங்குவது என்று புரியவில்லை. பாம்பின் மேல் குற்றமில்லை.

ஏனென்றால் அதன் விஷம் உணவில் விழுந்த சமயத்தில் அது இறந்து போயிருந்தது. கழுகின் மேல் குற்றமில்லை. ஏனென்றால் அது தன் உணவை சுமந்து கொண்டு பறந்து கொண்டிருந்தது.

மன்னன் தானம் கொடுக்கும் புண்ணிய மனது படைத்தவன். (தொடரும்)

# மகா அலெக்சாண்டரின் வரலாறு

## காதலும் கனவும்

107



எவ்வளவு பெரிய படை அவருடையது. வீரம், தன்மானம் என்று பேசிக்கொண்டு அவருடன் மோதுவது அறிவீனம். பேசாமல் சரணாகதி ஆகிவிடுவோம். முடிவு செய்துவிட்டான் அம்பி.

தட்சசீலத்தில் இருந்து சமாதானத் தூதுவர் ஒருவர் அலெக்சாண்டரைச் சந்திப்பதற்காக அனுப்பப்பட்டார்.

களம் காணாமலேயே வெற்றியா? சந்தோசமாக இருந்தது அலெக்சாண்டருக்கு. சரியென்று தலையாட்டினார் அலெக்சாண்டர். தட்சசீலத்துக்கு விருந்தினராக வருமாறு அழைப்பு விடுக்கப்பட்டது.

படை பரிவாரங்களுடன் தட்சசீலம் சென்றபோது மன்னன் அம்பி ஏராளமான பரிசுப் பொருட்கள், மலர் மாலைகளுடன் வரவேற்பதற்காக வழிமேல் விழிவைத்துக் காத்துக் கொண்டிருந்தான். அவற்றைப் பார்த்ததும் மகிழ்ச்சியாக இருந்தது அலெக்சாண்டருக்கு. எல்லாவற்றையும் ஏற்றுக் கொண்டார்.

மற்ற நாடுகளில் ஜெயித்து வைத்திருந்த விலையுயர்ந்த பொருட்கள் சிலவற்றை அம்பிக்குப் பிரதி உபகாரமாக அளித்தார் அலெக்சாண்டர். போரிட முன்வராததால் அம்பியைத் தனது நட்பு வட்டத்தின் ஒரு புள்ளியாக ஏற்றுக்கொண்டார்.

அரச விருந்தாளியாக அவர் தங்கியிருந்த சமயத்தில் அம்பியின் முயற்சியால் அக்கம் பக்கத்து மன்னர்கள் சிலரும் அலெக்சாண்டரிம் சரணடைந்தனர்.

என்னதான் சரணாகதிப்படலம் மகிழ்ச்சியை ஏற்படுத்தியிருந்தாலும் கூட, அடுத்தடுத்து முன்னேற வேண்டும் என்பதில் கவனமாக இருந்தார் அலெக்சாண்டர். சிறுவனாக இருந்த போது மன்னர் பிலிப் பேசியது எல்லாம் நினைவுக்கு வந்தன.

இந்தியாவையும் இந்திய மன்னர்களையும் பற்றிய தந்தையின் மதிப் பீட்டுக்கும் தற்போதைய நிலைக்கும் நிறைய முரண்பாடுகள் இருக்கின்றன.

ஆனாலும் அவருடைய கணிப்பு பொய்க்காது. அம்பியை வைத்து ஒட்டுமொத்த இந்திய அரசர்களின் வீரத்தையும் குறைத்து மதிப்பிடக்கூடாது.

ஹஸ்தி போன்றவர்களை நாம் மறக்கக் கூடாது. எந்தநேரத்தில் வேண்டுமானாலும் பரிசுத்தமான வீரர்களை நாம் எதிர்கொள்ள வேண்டியிருக்கும் ஜாக்கிரதை.

வீரர்களுக்கு எச்சரிக்கை விடுத்தபடி மென்மேலும் முன்னேறிச் சென்றார் அலெக்சாண்டர். (தொடரும்)

நீ யார்? என்பதைப் பிறருக்கு அறிவிப்பது உனது பேச்சு. ஆகவே, நீ பேசும்போது விழிப்பாயிருந்து பேச்சில் பிறரை ஏமாற்றி விடலாம் என ஒருபோதும் எண்ணிவிடாதே. அதனால் நீயே ஏமாறுவாய்.-கி.ஆ.பெ.விசுவநாதம்

வலம்புரி
TP: 021 222 3378
website : www:valampurii.lk

## முஸ்லிம் சகோதரர்களுக்கு ஓர் அவசர மடல்

முஸ்லிம் சகோதரர்களுக்கு அன்பு வணக்கம். முன்பும் சில தடவைகள் உங்களுக்கு கடிதம் எழுதிய ஞாபகம் உண்டு.

இப்போதும் இவ் அவசர மடலை எழுதுகின்றோம். ஆனால் முன்பு எழுதிய கடிதத்தின்போது இருந்த மனநிலையும் இப்போது இருக்கின்ற மனநிலையும் வேறுபட்டவை.

ஆம், சிறுபான்மை மக்களாகிய நாங்களும் நீங்களும் இந்த நாட்டில் படுகின்ற வேதனைகள் சொல்லிமாளா.

இருந்தும் இந்த உண்மையை உங்களால் ஏற்றுக் கொள்ள முடியாத அளவில் அரசியல் களநிலைமைகள் இருந்தன.

உரிமைக்கான விடுதலைப் போராட்டத்தைத் தமிழ் மக்கள் நடத்திக் கொண்டிருந்த போது, உங்களின் ஆதரவும் ஒத்துழைப்பும் அரசாங்கத்துக்குத் தேவையாக இருந்தது.

வெளிவிவகார அமைச்சராக ஹமீட் அவர்களை அப்போது நியமித்த இலங்கை அரசாங்கத்தின் இராஜதந்திரத்தை அன்று நீங்கள் உணர்ந்திருக்க நியாயமில்லை.

சிறுபான்மைத் தமிழ் மக்களுக்கு எதிரான பிரசாரத்தை இன்னொரு சிறுபான்மை இனமாகிய உங்களைக் கொண்டு இலங்கை ஆட்சியாளர்கள் செய்வித்தார்கள்.

தவிர, புலனாய்வுத்துறை தொடக்கம் தமிழ் மக்களை விசாரணை செய்கின்ற பிரிவு வரையில் முஸ்லிம் தரப்பாகிய உங்களுக்கு நியமனங்கள் வழங்கப்பட்டன.

தமிழ் மக்கள் நடத்திய விடுதலைப் போராட்டத்தை நீங்கள் வேறுவிதமாக கையாண்டீர்கள்.

அதாவது அரசாங்கத்துடன் சேர்ந்து போய் அரசியல் பதவிகளையும் அரசாங்க உத்தியோகங்களையும் பெற்றுக் கொண்டீர்கள்.

ஆட்சியாளர்கள் தமிழ் இனத்தை சங்காரம் செய்தபோதெல்லாம் நீங்கள் அரச தரப்புடன் சேர்ந்து நின்றீர்கள்.

ஒருமுறை நீதி அமைச்சராக இருந்த ஹக்கீம் ஜெனிவாவுக்குச் சென்று தமிழ் மக்களுக்கு எதிராக ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் கருத்துரைத்தார்.

ஆனால் இப்போது நிலை வேறாகிவிட்டது.

தமிழ் மக்களைக் கடந்து, முஸ்லிம் மக்களாகிய உங்களை ஒடுக்க வேண்டிய தேவை இந்த நாட்டின் ஆட்சியாளர்களுக்கு வந்து விட்டது.

உண்மை. தமிழர்களை அடக்கி ஒடுக்க உங்களைப் பயன்படுத்திய பேரினவாதம் இப்போது உங்களை ஒடுக்க முற்பட்டுள்ளது.

கொரோனாவைச் சாட்டுதலாக்கிக் கொண்டு கொரோனாத் தொற்றால் முஸ்லிம் இனத்தவர் ஒருவர் இறந்தால், அவரை எரிப்பது என்ற அரச தீர்மானம் சமகால நிலைமையை உங்களுக்குப் போதிக்கும் என நம்புகின்றோம்.

நிலைமை இதுவாக இருக்கையில், பொத்துவில் முதல் பொலிகண்டி வரை தமிழ் மக்கள் முன்னெடுத்துள்ள அகிம்சை வழிப் போராட்டத்துக்கு நீங்கள் ஆதரவு தெரிவித்தமை கண்டு அகமகிழ்கின்றோம்.

உங்கள் ஆதரவு சந்தர்ப்பவசமானதாக இல்லாமல்; நிலைத்த ஆதரவாக - இறுக்கமான ஆதரவாக - பற்றுறுதி கொண்ட ஆதரவாக அமைய வேண்டும் என்பதைக் கூறுவதற்காகவே இந்த அவசர மடலை எழுதுகின்றோம். ஏற்றிடுக!

# தோட்டத்தொழிலாளர்கள் தொடர்ந்தும் ஏமாற்றப்பட்டால் காத்திரமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்

## போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து யாழ். பல்கலை. சமூகம் அறிக்கை

(கொழும்பு)

பெருந்தோட்டத்தொழிலாளர்களின் அடையாள வேலைநிறுத்த போராட்டத்திற்கு அனைத்து தரப்பினரையும் ஒத்துழைக்குமாறு யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் கோரிக்கை விடுத்துள்ளது.

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் மாணவர் ஒன்றியத்தால் நேற்று வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பாராளுமன்ற தேர்தலின் போது முன் வைக்கப்பட்ட 1000 ரூபாய் அடிப்படைச் சம்பளம் என்ற விடயத்தை இனியும் காலம் தாழ்த்தாது அரசாங்கம் பெற்றுக் கொடுக்க வேண்டும்என அந்த அறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

பெருந்தோட்டத்தொழிலாளர்கள் தொடர்ந்தும் ஏமாற்றப்படுவார்களாயின், யாழ்ப்பாண பல்கலைக்கழக சமூகம் காத்திரமான நடவடிக்கையை மேற்கொள்ளும் எனவும் மாணவர் ஒன்றியத்தின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

சமூக நீதி தொடர்பான விடயங்களில்காணப்படும் குறைபாடுகள் நிவர்த்திக்கப்பட வேண்டும் எனவும் எதிர்வரும் 8 ஆம் திகதி சம்பள நிர்ணய சபையில் இடம் பெறவிருக்கும் பேச்சு வார்த்தையின் போது 1000 ரூபாய் சம்பளத்தை பெற்றுக்கொடுப்பதற்கு உறுதி எடுக்க வேண்டும் எனவும் மாணவர் ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தற்போது காணப்படுகின்ற விலைவாசியின் அடிப்படையில் வாழ்வதற்கான சம்பளமானது ஆயிரம் ரூபாயை விட அதிகமாக காணப்படும் பட்சத்தில் , அதற்கான பேச்சுவார்த்தை தோல் வியை நோக்கி செல்வது இலங்கையில் சமூக நீதி தொடர்பான பாரிய இடை வெளியை அடையாளப் படுத்துவதாகவும் அதில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.(நி-4)

## ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

### பரிவும் கர்மவினையும்

எல்லாக் குற்றவாளிகளுக்கும் நீதிபதி பரிவு காட்டினால் சிறைச்சாலைகள் காலியாகவே இருக்கும்.

குற்றவாளிகளைத் தண்டிப்பதனால் நீதிபதிகள் கொடுமையானவர்கள் என்று சொல்ல முடியுமா? இல்லையே! நீதிபதியின் பரிவு குற்றவாளிகளுக்கு அறிவில்லையே என்பதால் தான் குற்றவாளியின் துன்பத்திற்காக அல்ல. அது அவனுடைய கர்ம வினை.

பரிவு ஒரு செயல் என்றே மக்கள் பெரும்பாலும் எண்ணுகின்றனர்.

பரிவு உங்களுடைய இயல்பு என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள். அப்போது கர்மவினையும் பரிவும் ஒன்றுக்கொன்று எதிரானவை அல்ல. ஒன்றை யொன்று தழுவியவை என்பது புரியும்.

இரண்டு பேர் மருத்துவமனைக்குப் போகிறார்கள். ஒருவர் பசியால் வாடுபவர். இன்னொருவர் அளவிற்கு அதிகமாகச் சாப்பிட்டு அஜீரணத்தால் அவதிப்படுபவர். எந்தவகையான பரிவை மருத்துவர் இவர்கள் ஒவ்வொருவரிடமும் காட்டுவார். நீங்கள் தான் இதற்குத் தீர்வைக் கண்டு பிடிக்க வேண்டும். (முற்றும்)

## இந்து சமய தத்துவங்கள் ஐந்நூறு

கடவுள் சந்நிதியில் நாம் வாழ்கின்றோம். கடவுள் எங்கும் உறைபவர்.

நினைப்பதை, பேசுவதை, செய்வதை அவர் அறிந்து கொண்டேயிருக்கின்றார்.

ஆதலால் தீய சிந்தனை, தீய சொற்கள், தீய நடைகள் இவைகளை அறவே விலக்க வேண்டும்.

நல்ல சிந்தனை, நல்ல இனிய உண்மையுரைகள் நல்ல நடைகளை மேற்கொள்ள வேண்டும். (தொடரும்)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 06 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8 மணியிலிருந்து பிற்பகல் 5 மணி வரை

யாழ்.பிரதேசத்தில் இணுவில் கந்தசாமி கோவில், இணுவில் மேற்கு, பாலாவோடை, கொழும்புத்துறை, A.V Road, துண்டி, நெளுங்குளம், மணியந்தோட்டம், கெலனிதோட்டம், உதயபுரம், பாசையூர், புங்கன் குளம் சந்தி, உதயபுரம், Infentas Ice Solutions Pvt Ltd, பத்தானை, தாவடி மானிப்பாய் வீதி, தாவடி இந்து மயானம் ஆகிய இடங்களிலும்,

கிளிநொச்சி பிரதேசத்தில் உயிலங்குளம், தென்னியன்குளம், வேட்டையடைப்பு ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

## அறிந்துகொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

### பயன்தரும் ஆன்மீகக் குறிப்புக்கள்

நம் வீட்டின் ஒரு முக்கிய பங்கை வகிப்பது பூஜை அறை. பூஜை அறையில் நாம் பலவிதமான கடவுளின் படங்களை வைத்திருப்போம்.சுவாமி படங்களை மட்டுமல்லாது பூஜை அறையை சுத்தமாக வைத்திருப்பது அவசியமாகும்.

அந்தவகையில் நமக்கு பயன் உள்ள சில ஆன்மீகக் குறிப்புகளை பற்றி பார்ப்போம்.

கோயிலிலோ வீட்டு வாசலிலோ சூடம் ஏற்றும் போது காற்றினால் அணைந்து போகாமல் இருக்க சூடத்தை கையால் பொடி செய்துவிட்டு பிறகு பற்ற வைத்தால் அணையாமல் அழகாக எரியும்.

பூஜையறையில் உள்ள சுவாமிப் படங்களுக்கு மஞ்சள் குங்குமம் சந்தனம் சிறியதாக முத்துப் போல் வைக்க முடியாமல் போனால் காது குடையும் பட்ஸ் அல்லது ஒரு குச்சியில் சிறிது பஞ்சை சுற்றி வைத்து அதனால் குங்குமம் மஞ்சளை ஒத்தி எடுத்து படத்தில் வைத்தால் அழகாக முத்து போலவே இருக்கும்.

பூஜையறையில் உள்ள கண்ணாடி பிறேமிட்ட சுவாமி படங்களுக்கு வேப்ப எண்ணெய் சிறிது பஞ்சில் நனைத்து அந்த கண்ணாடியில் துடைத்தால் பூச்சி அரிக்காது படங்கள் பளபளவென மின்னும்.

நெல்லி மரம் உள்ள வீட்டை தீமைகள் அணுகாது. நெல்லி இலையால் கடவுளுக்கு அர்ச்சனை செய்வது மிகவும் சிறந்து நல்ல பலனும் கிடைக்கும்.


பூஜைகாலத்தில் நாம் ஆண் தெய்வங்களுக்கு தீபாராதனை காட்டும் போது (உதாரணமாக முருகர் கிருஷ்ணர்) கீழிருந்து மேலாகவும் பெண் தெய்வங்களுக்கு (துர்க்கை லஷ்மி) மேலிருந்து கீழாகவும் தீபம் காட்ட நன்மை நடக்கும்.

# யாழ்ப்பாண விஞ்ஞான சங்க A பிரிவு வழங்கும்

## அறிவுபூர்வமான புரிதல்: பார்வையை மாற்றுங்கள் பாதை தெளிவாகும்

இன்றைய இயந்திர உலகில், சுப்பர் கொம்பியூட்டர்கள், செயற்கை அறிவரற்றல் என விஞ்ஞானமானது அபரிமிதமான வளர்ச்சியைத் தொட்டு விட்டது. அதன் ஆக்கமும் அழிவும் அவ்வப்போது புரிந்துகொள்ள முடியாத அளவிற்கு வியக்க வைக்கின்றது. ஆகையால் தற்போது விஞ்ஞானிகள், விஞ்ஞானத்தில் விஞ்சிய விடயங்களை அறிவதற்கு ஞானம் எனும் பிரமாஸ்திரத்தை கையிலெடுக்கின்றனர். விஞ்ஞானத்தின் விகுதியான ஞானம் என்பது ஒரு பிரமாண்டமான அனுபவம் அல்ல.

ஞானம் என்பது ஒரு எளிய அறிவுபூர்வமான புரிதல் மட்டுமே. ஞானம் பெறுவதற்கு பயிற்சியும்தேவை இல்லை, முயற்சியும் தேவை இல்லை. ஒரு நொடி



ப்பொழுது போதும் இத்தனைப் புரிந்து கொள்வதற்கு.

நம்முடைய மன உணர்வுகளைச் சீரமைக்கும் வல்லமை நமக்குக் கிடையாது என்ற நமது இயலாமையை நாம் அறிவுபூர்வமாகப் புரிந்து கொள்ள வேண்டும், நம் அறிவு புறச்செயல்களை நிர்வாகம் செய்யலாம். மனதையும் நிர்வாகம் செய்ய முயலுவது தான் நம் எல்லா மன பிரச்சினைகளுக்கும் காரணம். நம் அறிவு நம் மனதை நிர்வாகம் செய்ய முடியாது. மனதில் எண்ணங்கள் அதன் போக்கில் தான் வரும். அவை நம் அறிவின் கட்டுப்பாட்டுக்குள் இல்லை.

நாம் தூங்குவதற்கு செல்கிறோம்... வெவ்வேறு எண்ணங்கள் வந்து கொண்டே இருக்கின்றன... 'எண்ணங்களே! நான் தூங்கப் போகிறேன்.... நாளை வாருங்கள்' என்று சொன்னால் கேட்குமா? 'மனசே, இன்று முழுவதும் மகிழ்ச்சியான எண்ணங்கள் மட்டுமே வர வேண்டும்... கோபம் மற்றும் துக்க எண்ணங்கள் வரக்கூடாது' என்று நாம் அறிவுபூர்வமான கோரிக்கை வைக்க முடியுமா? நம் மனம் நம் அறிவின் கைகளில் இல்லை என்று அறிவுபூர்வமாகப் புரிந்து கொள்வதுதான் 'ஞானம்'. தெளிவாக குழப்புகின்றேன் போல...சரி இதை ஒரு கதையைக் கொண்டு விளக்கப்பார்க்கின்றேன்.

ஒருமுறை பகவான் இராமகிருஷ்ணர் தனது மாணவர்களில் மூவரை அழைத்து, 'இன்று உங்களுக்கு ஞானம் என்பது எது? என்பதை ஒரு செயல் மூலம் விளக்கப் போகிறேன்' என்று சொல்லிவிட்டு மூவரையும் ஒரு அறையில் உட்கார வைத்தார்.

அவர் மற்றொரு அறைக்குச் சென்று சிறிது நேரத்தில் வெளியே வந்தார். அறையின் கதவுகளை மூடிவிட்டு அம் மூவரின் அருகில் வந்தமர்ந்தார். முதல் மாணவனைப் பார்த்து,'நான் போய்வந்த அறையினுள் மூன்று டம்ளர் பால் உள்ளது. அதில் நீ ஒரு டம்ளர் பாலை பருகிவிட்டு வா' என்றார். அவன் உள்ளே சென்றான். தங்கம், வெள்ளி, வெண்கலம் ஆகிய மூன்று டம்ளர்களில் பால் இருந்தது. தங்க டம்ளரில் இருந்த பாலை எடுத்து மிகுந்த சந்தோசத்தோடு பருகினான்: பிறகு வெளியே வந்தான்.

அடுத்து இரண்டாவது மாணவன் உள்ளே சென்றான். தங்கத் டம்ளரில் பால் இல்லாததைப் பார்த்த அவன் அதிலிருந்த பால் தனக்குக் கிடைக்கவில்லையே என்று ஆதங்கமுற்றான். ஆயினும் அதற்கடுத்த மதிப்பினைக் கொண்ட வெள்ளி டம்ளரில் இருந்த பாலை எடுத்துக் குடித்துவிட்டு ஓரளவு நிறைவோடு வெளியே வந்தான்.

மூன்றாவது மாணவன் உள்ளே சென்றதும் காலியாகக் கிடந்த தங்க, வெள்ளி டம்ளர்களைப் பார்த்ததும் கோபம் தலைக்கேறியது. 'எனக்கு வெண்கல டம்ளர் பாலா? யாருக்கு வேண்டும் இது? நான் என்ன அவ்வளவு இளப்பமானவனா? எந்தவிதத்தில் நான் தாழ்ந்தவனாகி விட்டேன்?' என்று அவன் மனதில் எண்ணங்கள் ஓடின. ஆயினும் குரு பாலைக் குடித்து வா என்றதை நினைவில் கொண்டு வருத்தத்தோடு குடித்துவிட்டு வெளியே வந்தான். அவன் முகத்தில் சுரத்தே இல்லை!

பகவான் இராமகிருஷ்ணர் மூவரையும் பார்த்து,'பாலைக் குடித்தீர்களா?' என்றார். முதல் மாணவன் மகிழ்ச்சிப் பூரிப்புடன், 'தங்க டம்ளரில் பால் குடித்தேன். நான் மிகவும் கொடுத்து வைத்தவன், குருவே!' என்றான். இரண்டாவது மாணவன், 'எனக்கு தங்கத் டம்ளரில் பால் கிடைக்கவில்லை என்கிற வருத்தம் இருந்தாலும் வெள்ளி டம்ளரிலாவது கிடைத்ததே என்கிற மகிழ்ச்சி ஓரளவு இருக்கிறது, குருஜி என்றான்.

மூன்றாவது மாணவன் பதில் சொல்ல ஆரம்பிக்கும் முன்பே அழுகை வந்து விட்டது. அதனூடேயே அவன், 'மூன்று பேர்களில் மிகவும் துரதிர்ஷ்டக்காரன் நானே குருஜி. எனக்கு வெண்கல டம்ளரில் தான் பால் கிடைத்தது' என்றான்.

பகவான் இராமகிருஷ்ணர் அமைதியாக எல்லாவற்றையும் கேட்டபின் பேச ஆரம்பித்தார். 'மாணவர்களே! தங்கம், வெள்ளி, வெண்கலம் ஆகிய மூன்று டம்ளர்களிலும் ஏலக்காய், குங்குமப்பூ சேர்த்து சுண்டக் காய்ச்சிய சுவையான பசும்பால்தான் ஒரே அளவில் இருந்தது.

அதில் எந்த வேறுபாடும் இல்லை. பாலை பருகப் போகிற மூவருக்குமே அதிலிருந்து ஒரே மாதிரியான சுவையும் சத்துவ குணமும்தான் கிடைக்கப் போகிறது. அதிலும் வேறுபாடில்லை. ஆனால் நீங்கள் மூவருமே நினைத்தது வேறு. பால் ஊற்றி வைத்திருக்கும் டம்ளர்களின் மதிப்பைப் பற்றியே உங்கள் மனம் யோசித்தது. பாலின் குணம், சுவை, மணம், போசணை ஆகிய அனைத்தும் ஒரேமாதிரித்தான் இருக்கும் என்பதை யோசிக்கவே இல்லை.


ஆகவே நீங்கள் பண்டத்தை விட்டு விட்டு பாத்திரத்தையே பார்த்துள்ளீர்கள்! பாத்திரத்தைப் பார்த்து சந்தோசப்படுவது அறிவு. அதில் உள்ள பண்டத்தைப் பார்த்து இன்புறுவது ஞானம். ஞானிகள் பண்டத்தைப் பற்றியும் அதன் பயன் பற்றியுமே பார்ப்பார்கள். பாத்திரங்களுக்கு மதிப்புத்தர மாட்டார்கள். மண்சட்டியில் ஊற்றிக்கொடுத்தால் கூட ஆனந்தமாக பருகிச் செல்வார்கள். நீங்கள் அறிவு கொண்டு பார்க்காமல் ஞானம் கொண்டு பார்த்திருந்தால் மூவருமே ஒரேமாதிரியான மனோநிலையை எட்டியிருப்பீர்கள்!' என விளக்கினார்.

பகவான் இராமகிருஷ்ணர் தனது மாணவர்களுக்கு விளக்கியது போல நடைமுறையில் கொலை, களவு, இலஞ்சம் போன்ற தீய செயல்களை செய்த மனிதர்களையும் பார்க்கிறோம். ஒரு தவறும் செய்யாத அப்பாவி மனிதர்களையும் பார்த்திருக்கிறோம். ஒரு வேளை தீய செயல்களைச் செய்த மனிதன், தன் தவறுகளையெல்லாம் திருத்தி மனதிற்குள் தெளிவாக இருந்தும் ஒரு பாவமும் அறியாத நல்லவன், எல்லா நேரத்திலும் கவலையிலும் வேதனையிலும் குழப்பத்திலும் இருந்தானேயானால் அவ்விருவரில் உடலாலும் மனத்தாலும் நல்லவனே அதிகம் பாதிக்கப்படுவான். சில சமயங்களில், நல்லவர்கள் அவதிப்படுவதற்கும் கெட்டவர்கள்கூட நன்றாக வாழ்வதற்கும் இதுவும் ஒரு காரணம் எனலாம். ஆகையால் நாம் நல்லவர்களாக வாழ்வது மட்டும் போதாது. மனதிற்குள் புழுங்கும் பழக்கங்களையும் விட்டொழிப்பவர்களாக விளங்க வேண்டும்.

சதா மகிழ்ச்சியையும் நிம்மதியையும் மனதிடம் தேடிக்கொண்டு இருந்த நம் அறிவு, தேடுதலை நிறுத்தி விடுகிறது. மனதில் ஓடும் உணர்வுகளுடன் போராடி புதுப்பித்துக்கொள்வதை நிறுத்தி விடுகிறது. அறிவின் குறுக்கீடோடு இல்லாத நம் மனம் நின்று விடுவதில்லை. அது விடுதலையுடன் இயங்கத் தொடங்கி விடுகிறது. இதுவே ஆன்மிகத்தில் உயர்வாகக் கருதப்படும் முக்தி. இதுவே ஞான விடுதலை. இது ஒரு அனுபவம் அன்று. எல்லா அனுபவங்களும் சுதந்திரமாக வந்து போவது தான் விடுதலை. ஒரு குழந்தையானது இந்த விடுதலையுடன் தான் இருக்கின்றது. எல்லா ஞானிகளும் இந்த மன விடுதலையுடன் தான் வாழ்கின்றார்கள்.

புறத்தில் நடப்பவற்றை எல்லாம் பிரதிபலிப்பது நம் மனதின் இயற்கை. நம் அறிவு முயற்சி செய்து தான் விரும்பியதை நம் மனம் பிரதிபலிக்க வேண்டும் என்று ஒவ்வொரு கணமும் போராடுகிறது. இந்த முடிவில்லா போராட்டம், ஒரு வீண் முயற்சி என்று நம் அறிவு புரிந்து கொள்ளும் பொழுது தன் முயற்சியை முழுமையாக கைவிடுவது தான் ஞானம். இதுவே அகசரணாகதி. ஞானம் என்பது ஒரு **"அறிவுபூர்வமான புரிதல்"** (Intellectual Understanding) மட்டுமே.

**காலிங்கராசா ஹரிச்சந்திரா**
**தொழில்நுட்ப அலுவலர்,**
**மீன்பிடியியல்**
**விஞ்ஞான துறை,**
**விஞ்ஞான பீடம்,**
**யாழ்.பல்கலைக்கழகம்.**



## காயங்களுடன்...

காயங்களுடன் பெண்ணின் சடலம் ஒன்று நேற்று மீட்கப்பட்டுள்ளது.

குறித்த பெண் வீட்டில் இருந்த நிலையில் காணியின் ஒரு பகுதியில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சம்பவத்தில் எருக்கலம்கல் பகுதியை சேர்ந்த சிவகுமார் சித்திரகலா என்ற 36 வயதான பெண்ணே மரணமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். அவரது தலைப்பகுதியில் பலத்த காயம் ஒன்றும் அவதானிக்கப்பட்டுள்ளது.

குறித்த பகுதிக்கு சென்ற பூவரசங்குளம் பொலிஸார் சடலத்தினை மீட்டுள்ளதுடன் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-3.250,299)

## வடக்கில்...

தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

யாழ். போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் 387 பேரின் பிசிஆர் மாதிரிகள் நேற்று சோதனைக்குள்ளாக்கப்பட்டது.

இதில், வவுனியா பொது வைத்திய சாலையில் 2 பேர், முல்லைசுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 6 பேரும் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டனர். (ம-3,18)

## சுதந்திர தினத்தை...

பதாதைகள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

வடக்கு - கிழக்கு மக்களின் வாழ்வுரிமையையும் காணாமல் ஆக்கப்பட்டோருக்கு நீதிகேட்டும் நாட்டின் 73ஆவது சுதந்திர தினமான நேற்று கரிநாளாகப் பிரகடனப்படுத்தப்பட்டு பல்வேறு போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

பொலிஸாரின் தடைகளை மீறியும் போராட்டங்கள் முன்னெடுக்கப்படும் நிலையில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் கரிநாளாகப் பிரகடனப்படுத்தி பதாதைகள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. (ம-3,33)

## எங்களை தனித்...

தரணியும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.

பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான நீதிகோரும் மாபெரும் கவனயீர்ப்பு பேரணி மட்டக்களப்பு தாளங்குடா நகரில் இருந்து ஆரம்பித்து ஓட்டமாவடி நகரை அடைந்த நிலையில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

பெரும்பான்மை ஆட்சி, எங்களை அடக்குகின்ற ஆட்சி, எங்களுக்கு சுதந்திரம் இல்லாமல் அடக்கி ஒடுக்கி ஆட்சி செய்கின்ற முறையை எதிர்த்து பல விடயங்களை முன்வைத்துள்ளோம். அனைத்து இடங்களிலும் எங்களோடு மக்கள் இணைந்து போராடுகின்றார்கள்.

தமிழ் மக்களின் நீண்டகால பிரச்சினைகள், எங்களது அரசியல் கைதிகள் விடுதலை, காணாமலாக்கப்பட்டோருக்கு நீதி செய்யப்பட வேண்டும். எங்களது நிலங்கள் அபகரிப்பு நிறுத்தப்பட வேண்டும். வழிபாட்டுத் தலங்கள் உடைக்கப்படுகின்றன. அவை நிறுத்தப்பட வேண்டும்.

நாங்கள் பெரும்பான்மை இனத்தினை சேராதவர்கள் என்ற ஒரு காரணத்திற்காக எங்கள் மக்களுக்கு எதிராக கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள பேரினவாதத்திற்கு எதிராக நாங்கள் ஒன்றுசேர்ந்து திரண்டு நின்றால் மட்டும்தான் முகம் கொடுக்க முடியும்.

இதுவரைக்கும் எங்களை தனித் தனியாக கையாண்டார்கள். எங்களை தனித்தனியாக பிரித்தாள முடியாது என்ற செய்தியை இந்த நடைபயணத்தின் மூலமாக சொல்கின்றோம் என்றார். (ம-3)

## இலங்கையை...

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நான் ஒரு சிங்கள பௌத்த தலைவன். அதை வெளிப்படுத்த நான் ஒருபோதும் தயங்க மாட்டேன். பௌத்த போதனைகளின்படியே நான் இந்த நாட்டை நிர்வகிக்கிறேன். அனைத்து சமயங்களுக்கும் அனைத்து இனங்களுக்கும் உரிய கௌரவத்தை அளிக்கும் அஹிம்சையும் அமைதியும் கொண்ட பௌத்த தத்துவத்தில், எமது நாட்டில் உள்ள அனைத்து மதங்களுக்கும் அனைத்து இனங்களுக்கும் நாட்டில் நடைமுறையில் உள்ள சட்டகட்டமைப்பிற்குள் சரிசமமாக சுதந்திரத்தை அனுபவிக்கும் உரிமை உண்டு.

இலங்கை ஒரு ஜனநாயக நாடு. இந்த நாட்டில் வாழும் அனைத்து குடிமக்களுக்கும் சம உரிமை உண்டு. இன அல்லது மத அடிப்படையில் குடிமக்களைப் பிரிப்பதற்கான முயற்சிகளை நாங்கள் நிராகரிக்கிறோம். அனைத்து குடிமக்களின் அடிப்படை உரிமைகள் மற்றும் மனித உரிமைகள் பாதுகாக்கப்படுவதுடன், ஒரே சட்டம் என்ற கொள்கையே எமது நாட்டில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்பதுவே எப்போதும் எமது நிலைப்பாடு என்றார். (ம-3)

## அகிம்சை...

ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையிலான பேரணியில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலே அவர்கள் இதனைக் கூறியுள்ளனர்.

இதன்போது அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

தமிழர்களுக்கு நீதிகோரி முன்னெடுக்கப்பட்டுவரும் போராட்டத்தை குழப்ப வேண்டாமென கேட்டுக் கொள்கிறோம்.

மக்களுக்காக மேற்கொள்ளப்பட்டு வரும் இப் போராட்டத்தை யாரும் அரசியல் மயமாக்க வேண்டாம். அரசியல்வாதிகளுக்கு மாலைகளை வழங்கி இந்த போராட்டத்தை சினிமாமயப்படுத்த வேண்டாம்என்றனர். (ம-3)

## 07 பேர்...

கொரோனா தொற்றுக்கு உள்ளாகி மேலும் 07 பேர் உயிரிழந்துள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் நேற்று அறிவித்தார்.

அதன்படி, நாட்டில் கொரோனா தொற்றுக்கு உள்ளாகி உயிரிழந்தோரின் எண்ணிக்கை 339 ஆக அதிகரித்துள்ளது.(ம-3)

## நீதிக்கான...

களுக்கு எதிராகவும் வடக்கு - கிழக்கு சிவில் சமூகத்தினரால் ஒருங்கிணைக்கப்பட்டு முன்னெடுக்கப்பட்டு வரும் பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான பேரணி மேலும் ஒருநாள் நீடிக்கப்பட்டுள்ளது என பேரணி ஏற்பாட்டுக் குழுவினர் தெரிவித்துள்ளனர். (ம-3)

## தமிழர்கள்...

யாக கடைப்பிடிக்கும்போதுதான் சர்வதேச நீதியையும் தமிழினத்திற்குத் தேவைப்படும் அரசியல் உரிமைகளையும் நாங்கள் பெறக்கூடியதாகவிருக்கும் எனத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

யாழில் நேற்று வியாழக்கிழமை கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், பத்து வருடங்கள் கடந்த பின்னர் தமிழ் மக்கள் தங்கள் உரிமைகள் மறுக்கப்பட்ட நிலையில் அடக்கி ஒடுக்கப்பட்டு வாழ்கின்ற இந்தச் சந்தர்ப்பத்தில் யதார்த்தத்தை வெளிக்கொண்டுவரும் வகையில் இன்றைய (நேற்று) தினத்தை கரிநாளாக அனுஷ்டிக்க ஆரம்பித்துள்ளனர் என்றார். (ம-3,18)

## புரட்சி...

தருகிறது. சிங்களப் பேரினவாத ஆட்சியாளர்களின் கோர அடக்குமுறைகளுக்கு மத்தியிலும் நெஞ்சுரத்தோடு போராட்டத்தை முன்னெடுத்திருக்கும் ஈழச் சொந்தங்களைப் பெரிதும் போற்றுகிறேன்.

இவ்வாறு நாம் தமிழர் கட்சி தலைமை ஒருங்கிணைப் பாளர் செந்தமிழன் சீமான் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இலங்கை சுதந்திர நாளினை, கறுப்பு நாளாகக் கடைப் பிடித்து, வடக்கு, கிழக்கு மாகாணங்களில் காணாமல் ஆக்கப்பட்ட தமிழர்களைக் கண்டு பிடித்துத் தரக்கோரி அவர்களது உறவுகளால் தொடங்கப்பட்டுள்ள நீதிக்கான இப்போராட்டத்தை முழுமையாக ஆதரிக்கிறேன். போராட்டம் வெற்றியை நிலை நாட்டவும், கோரிக்கைகள் நிறைவேற்றம் செய்யப்படவும் எமது உளப்பூர்வமான வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

புரட்சி எப்போதும் வெல்லும்! நாளைய வரலாறு அதனைச் சொல்லும்! என்றார். (ம-3)

## தமிழர்களின்...

நேற்றைய பேரணியில் தமிழ் பேசும் இஸ்லாமிய மக்கள் பெருமளவில் பங்கேற்று வலுச் சேர்த்திருந்தனர். தமிழ் பேசும் மக்களாக ஒன்றாக இலங்கை அரசின் அடக்கு முறைகளுக்கு எதிராக கோசமெழுப்பியிருந்தனர்.

2ஆவது நாள் பேரணி நேற்று வியாழக்கிழமை காலை மட்டக்களப்பு தாளங்குடாவிலிருந்து ஆரம்பித்து ஆரையம்பதி, காத்தான்குடி, மட்டக்களப்பு, ஏறாவூர், செங்கலடி, வாழைச்சேனை வழியாக ஓட்டமாவடி நகர எல்லைக்குள் நுழைந்தபோது முன்னாள் இராஜாங்க அமைச்சரும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தவிசாளருமாகிய எம்.எஸ்.எஸ். அமீர் அலி தலைமையில் பெருமளவான முஸ்லிம் மக்களும் இணைந்து கொண்டிருந்தனர்.

நேற்றைய பேரணியில் வடக்கு கிழக்கு சிவில் சமூகத்தினர், பல்கலைக்கழக மாணவர்கள், தமிழ் தேசிய கட்சிகளை சார்ந்தவர்கள், பாராளுமன்ற உறுப்பினர்களான இரா.சாணக்கியன், எம்.ஏ. சுமந்திரன், செல்வராசா கஜேந்திரன் கோ.கருணாகரம், சி.ஸ்ரீதரன், அ.கலையரன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், இளைஞர்கள் உள்ளிட்டவர்கள் இன ஒற்றுமையுடன் பங்கேற்று வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (ம-3)


வாசனா சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 1662 திகதி 2021.02.04
ஆங்கில எழுத்து Q வெற்றி இலக்கங்கள் 12 32 42 71

மெகா பவர்
திகதி 04/02/2021
சீட்டிழுப்பு இலக்கம் 0755
வெற்றி சுழற்சி சுப்பர் இலக்கம் Q 18 வெற்றி இலக்கங்கள் 07 40 59 73

மஹஜன சம்பத
திகதி 2021/02/04
சீட்டிழுப்பு இலக்கம் 4388
ஆங்கில எழுத்து K வெல்லப்பட்ட இலக்கங்கள் 6 1 7 9 2 5

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 04.02.2021
சீட்டிழுப்பு இலக்கம் 2683
ஆங்கில எழுத்து F வெற்றி இலக்கங்கள் 06 09 53 64

தன நிதானய
திகதி -2021.02.04
சீட்டிழுப்பு இலக்கம் - 425
T 37 41 61 68
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்

அத கோடிபதி
கிழமை: வியாழக்கிழமை
சீட்டிழுப்பு இல: 1184
வர்ணம்: கடும் நீலம்
சீட்டிழுப்பு திகதி: 04.02.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 105,012,270
வெற்றி இலக்கங்கள் 06 20 52 57 ஆங்கில எழுத்து X
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிதா
கிழமை: வியாழக்கிழமை
சீட்டிழுப்பு இல: 3514
வர்ணம்: சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 04.02.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 31,074,902
வெற்றி இலக்கங்கள் 02 08 44 55 R
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சංවර්ධන වාසනාව
உத்தியோகபூர்வ முடிவுகள்
வெற்றி வாரம் 407 திகதி 04.02.2021 வர்ணம் நீலம்
ஆங்கில எழுத்து M வெற்றி இலக்கங்கள் 01 08 64 விதி எண் 9
எதிர்வரும் சுப்பர் பரிசுத்தொகை ரூ. 13,609,420
6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
தொ. பே.: 0112 333 546/47
Web: www.dlb.lk

ராசி
சுப்பர் ஜக்பொட் 29,64,173/=
திகதி: 04.02.2021
வெற்றி வாரம்: 3065
வர்ணம்: மண்நிறம்
வெற்றி இலக்கங்கள் 26 28 41 43 கும்பம்
வெல்லப்படும் மொத்த பரிசுத் தொகை ரூ. 77,02,360

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1358 நிறம் பச்சை
சீட்டிழுப்பு திகதி 04/02/2021 தினம் வியாழக்கிழமை
வெற்றி எழுத்தும் இலக்கங்களும் S 29 30 42 49
அடுத்த சுப்பர் ஜக்பொட் 66,933,422/=

# சுதந்திர தினத்தை கரிநாளாக அறிவித்து கிளிநொச்சியில் உறவுகள் போராட்டம்

(கிளிநொச்சி)

இலங்கையின் சுதந்திர தினத்தை கரி நாளாக அறிவித்து வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயம் முன்பாக பாரிய கவனயீர்ப்பு போராட்டத்தை நடத்தியுள்ளனர்.

நேற்று காலை 10 மணியளவில் குறித்த கவனயீர்ப்பு போராட்டம் கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயம் முன்பாக இடம்பெற்றது.

இதன்போது வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளால் கறுப்பு பட்டி அணிந்து போராட்டம் முன் னெடுக்கப்பட்டதுடன், பதாதைகளையும், கறுப்பு கொடிகளையும் அவர்கள் ஏந்தியிருந்தனர். குறித்த போராட்டத்தில் பல்வேறு கோரிக்கைகளும் முன்வைத்து கோசங்களும் போராட்டத்தில் ஈடுபட்டவர்களால் முன்னெடுக்கப்பட்டது.

குறித்த போராட்டத்தில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன், யாழ்.மாநகர முதல்வர் மணிவண்ணன் உள்ளிட்டோரும் பங்கு கொண்டனர். (ம-03,100)



# தீவிரவாதம் தலைதூக்க இடமளிக்கப்படமாட்டாது

## ஜனாதிபதி கோட்டா

(கொழும்பு)

தீவிரவாதம் மீண்டும் நாட்டில் தலைதூக்குவதற்கு இடமளிக்கப்படமாட்டாது என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கொழும்பு சுதந்திர சதுக்க வளாகத்தில் நேற்று இடம்பெற்ற சுதந்திர தின நிகழ்வில் கலந்துகொண்டு பேசும்போதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், உயிர்த்த ஞாயிறு தின தாக்குதலுடன் தொடர்புடையவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

அதேபோல், நாட்டில் தற்சமயம் காணப்படும் கொரோனா அச்சத்தினை கட்டுப்படுத்த அர்சாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ம-3)

# குளவிக் கொட்டுக்கிலக்காகி ஒருவர் வைத்தியசாலையில்


## வவுனியாவில் சம்பவம்

வவுனியாவில் சிறுவர் மேம்பாட்டு உத்தியோகத்தர் ஒருவர் குளவி கொட்டுக்கு இலக்காகி வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இது பற்றி தெரியவருவதாவது, வவுனியா இறம்பைக்குளம் நாகபூசணி அம்மன் கோவிலில் நேற்றைய தினம் திருமண நிகழ்வொன்று இடம்பெற்றது. குறித்த ஆலயத்திற்கு அருகில் இருந்த குளவிக்கூடு திடீர் என்று கலைந்த நிலையில் திருமண நிகழ்வில் கலந்து கொள்வதற்காக சென்ற வவுனியா சிறுவர் மேம்பாட்டு உத்தியோகத்தர் ஜெயக்கெனடி மீது தாக்கியது.

இதனால் காயமடைந்த அவர் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ம-03,250,299)

# ஒரே நாடு; ஒரே இனம்; யாழில் ஒரு குழுவினர் பேரணி



(யாழ்ப்பாணம்)

ஒரே நாடு ஒரே இனம் என்ற கோஷம் எழுப்பியவாறு ஒரு குழுவினர் யாழ்ப்பாணத்தில் நேற்று பேரணியை நடத்தினர்.

இந்தப் பேரணியின் நிறைவில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளரும் இராஜாங்க அமைச்சருமான தயாசிறி ஜெயசேகர பங்கேற்று யாழ்ப்பாணம் பொது நூலக முகப்பில் விளக்கேற்றி வைத்தார்.

இந்த பேரணிக்கு பொலிஸார் எத்தகையை தடையையும் ஏற்படுத்தவில்லை.

யாழ்ப்பாணம் பண்ணை சுற்றுவட்டத்தில் ஆரம்பமான பேரணி கோட்டையை சுற்றி ஏ-9 வீதிச் சந்தி ஊடாக கே. கே. எஸ் வீதியில் பயணித்து சத்திரச்சந்தியால் வைத்தியசாலை வீதியால் பயணித்து மகாத்மா காந்தி வீதியூடாக யாழ்ப்பாணம் பொது நூலகத்தை வந்தடைந்தது.

இலங்கையின் சுதந்திர தினத்தை வடக்கு - கிழக்கில் கரிநாளாகப் பிரகடனப்படுத்தி தமிழ் மக்கள் பல்வேறு வாழ்வுரிமை - நீதிப் போராட்டங்களை முன்னெடுத்துள்ள நிலையில் இந்த பேரணி முன்னெடுக்கப்பட்டது.

தமிழ் மக்களின் எழுச்சிப் போராட்டத்துக்கு கோவிட் -19 தொற்றுநோயைக் காரணம் காட்டி நீதிமன்றத் தடை உத்தரவு பெற்று தடுக்க முற்பட்ட பொலிஸார், இந்தப் பேரணிக்கு அனுமதியளித்தனர். (ம-3,33)


**IELTS CLASSES**

கொழும்பு பல்கலைக்கழக ஆசிரியரினால் யாழ். நகரில் IELTS (Academic and General ) A1 UK Exams (வாழ்க்கைத் துணையுடன் இணைவதற்கான பரீட்சை ) English Grammar and Spoken English தனியாகவும் குழுவாகவும் கற்பிக்கப்படும். Guaranteed to 7.5 in IELTS Exams.

Jaffna College Under Graduate Department
( Group and Personal Classes available )

Please Contact :
077 780 3970, 074 007 1970

(5522)



**கணக்கீடு**

புதிய அலகுகள் ஆரம்பம்

A/L 2021 கம்பனி
நாளை 11.00 a.m

A/L 2022
வங்கிக் கணக்கியற் கூற்று
நாளை 10.00 a.m

A/L 2021 Paper Class
பிரிவு - I புதன், வெள்ளி 3.00 p.m
பிரிவு - II புதன், வெள்ளி 4.00 p.m

கணக்கீட்டுச் சமன்பாடு

S.தவா
B.Com (Hons) Acc. Spl. (PGDE)
M.A in Edu. (Hons)

" ஆசிரியரின் கடந்த வருட மாணவப் பெறுபேறு யாழ். நிலை 01,02 மற்றும் தொடர்நிலைகள் "

DCM(N) யாழ். நகர்
( யா/வேம்படி பெண்கள் உயர்தர பாடசாலை அருகில் )
077 239 5858
நிர்வாகம்

(5535)



**மணமகள் தேவை**

சுவிஸ் நாட்டில் சாரதியாக கடமையாற்றும் 1990 ஆம் ஆண்டு பிறந்த உத்தரட்டாதி, 49 இற்குமேல் கிரக பாவமுடைய இந்து உயர்குல மணமகனுக்கு சுவிஸ் PR உள்ள மணமகள் தேவை.

077 190 3165

(C-1354)



**காரைநகர் கிழவன்காடு கலாமன்றத்தின் நன்றி பகிர்தல்**



எமது கலாமன்றத்தால் வருடம்தோறும் சற்குரு ஸ்ரீ தியாகராஜர் சுவாமிகளின் ஆராதனை நிகழ்வு நடைபெற்று வருவது யாவரும் அறிந்ததே. அந்தவகையில் இந்த வருடத்திற்கான ஆராதனை நிகழ்வு 02.02.2021 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. இந்நிகழ்வில் தியாகராஜ சுவாமிகளின் திருவுருவப்படம் முருகன் ஆலயத்திலிருந்து ஊர்வலமாக கொண்டுவருவதற்கு மங்கள இசை வழங்கிய காரை. கணேசன் சந்திரன் குழுவினருக்கும் நிறைகுடங்கள் வைத்து வரவேற்று சிறப்பித்த காரைநகர் புதுவீதி அன்பர்களுக்கும் நிகழ்வில் மங்கள இசை வழங்கிய புகழ்பூத்த தவில் நாதஸ்வர கலைஞர்கள், இசைக் கலைஞர்கள் மற்றும் பக்கவாத்திய கலைஞர்களுக்கும் நிகழ்வு சிறப்பாக சுகாதார நடைமுறைகளுக்கு அமைவாக நடைபெறுவதற்கு அனுமதி வழங்கிய பொது சுகாதார பிரிவினருக்கும் உடல் நிலை இயலாத நிலையிலும் மன்றத்தின் சேவையை கௌரவிக்கும் வகையில் நிகழ்வில் கலந்து சிறப்பித்த கலைஞர்களுக்கும் நிகழ்வுகள் சிறப்பாக நடைபெறுவதற்கு சரீர ஒத்துழைப்பு வழங்கிய கலாமன்ற பதிவாளர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் ஆகியோருக்கும் நிகழ்வுக்கான அனுசரணை வழங்கி சிறப்பித்த சிவகணேசன் புடவையக நிறுவனத்தினருக்கும் நிகழ்வில் கலந்து கொண்ட கலாரசிகர்களுக்கும் எமது நன்றியினை மனப்பூர்வமாக தெரிவிப்பதோடு கலாமன்றத்தின் சேவைகள் மேலும் சிறப்படைய அனைவரது ஒத்துழைப்பையும் வேண்டி நிற்கின்றோம்.

கிழவன்காடு கலாமன்றத்தினர்,
காரைநகர் கிளை, யாழ். கிளை.

(5538)



**காணி விற்பனைக்கு**

யாழ். பிறவுண் வீதி, கல்வாரி சேர்ச் அருகில் 5 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

076 702 3565

(5530)



**காணி விற்பனைக்கு**

கொக்குவில், பிரம்படி 2 ஆம் ஒழுங்கையில் 2 1/2 பரப்புக் காணி வெட்டுக்கிணற்றுடன் விற்பனைக்கு உண்டு.

076 702 3565

(5530)



**அண்ணா** EXPRESS Courier Services
விரைவுப் பொதிகள் சேவை

3-6 நாட்கள்
லண்டன் 1000/= 070 3305500 075 3305500

976,கே.கே.எஸ் வீதி நாச்சிமார்கோவிலடி யாழ்ப்பாணம் | சங்கானை ஆவரங்கால் நெல்லியடி சங்கத்தானை | பளை கிளிநொச்சி புதுக்குடியிருப்பு முல்லை | மல்லாவி மன்னார் வவுனியா கொழும்பு

லண்டன்,பிரான்ஸ்,ஜேர்மனி உட்பட 20 நாடுகளுக்கு மேலதிக கட்டணமாக வரிகள் ஏதும் இல்லை

15,000 /- பெறுமதி வரை காப்புறுதி இலவசம்

உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் பெற்றுக்கொள்ளப்படும்.(யாழ் மாவட்டம் முழுவதும்)

(C-1331)



**விரைவு பொதிகள் சேவை**

V2 TRAVELS

UK-1000/=Kg

பிரான்ஸ் / ஜெர்மனி / டென்மார்க் நெதர்லாந்து / இத்தாலி / சுவிஸ் 1150/=Kg

எமது நேரடிக்கிளைகள்

- யாழ்ப்பாணம்
- புத்தூர்
- கோப்பாய்
- நெல்லியடி
- கொடிகாமம்
- மானிப்பாய்
- புதுக்குடியிருப்பு
- சுன்னாகம்
- கிளிநொச்சி
- பருத்தித்துறை
- வல்வெட்டித்துறை
- சாவகச்சேரி

0768226240 DHL

(C-1336)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 05.02.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.